விசேஷ விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விசேஷ விளம்பரத்திற்கு!

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 2-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ௫௪] யாழ்ப்பாணம்:— விஷு ௵ மார்கழி ௴ ௨௫ ௨ (1942 ஜனவரி 8 வியாழக்கிழமை) [இலக்கம்] ௭௪]

தியாகராஜ சுவாமிகளும் இசைக்கலையும்

(திரு .P. சந்திரசேகரம்)

இவர்தான் தற்போது தமிழ் நாட்டில் நடையிலிருக்கும் இசைக் கலைக்கு முதல்வராவர். பண்டைநாளில் தமிழிலிருந்த இசை இடையே அழிந்துபோகப் பின் அதை இவர்தாம் அப்போது அறிந்தவராவர், கடவுள் திருவையாறும் இசையிலக்கண மாராய்ந்து மாபுகழ்பூத்த ஸ்ரீராமபிரான் பேரில் அவர்தம் பேருளை வியந்து பஜனை செய்து பல கீர்த்தனைகளைப் பாடி எமக்கு அளித்துள்ளார்.

இவரைத் தமிழ்நாடு முழுதுமறியும், அவர் பெயர் எல்லாருடைய இருதயத்திலும் நன்கு பதிந்திருக்கிறது. வருஷந்தோறும் திருவையாற்றில் இவரது சமாதியின் முன்பாக நடக்கும் சங்கீதக் கச்சேரிகளையும், நர்த்தனங்களையும், இசைவாணர்கள் தம் இன்பக் கண்ணீர்ப் பெருக்கையுங்காணும் ஒருவன்தன் காட்சியை யாமென்னவென் றோம்! ஆ! அஃதல்லவோ இன்பநிலையம்! இறைவனின் எழிற்சாலை! ஒரே அமைதி. முத்துப்போன்ற காவேரியாற்றின் பெருக்கம் ஒரு பக்கம்; அதன்கரையில் ஜடாயு வேயப்பெற்ற மாபெரும்மண்டபம் ஒன்று. அதன் நடுவே, சமாதியின் முன்னிலை எழெட்டுபேர் தூரத்தில் இசைவாணர்கள் வதிந்திருந்து பாடும் பெரிய வேதிகை (அரங்கு) அவ் வேதிகையில் ஏறியிருந்த வித்துவான்கள் அன்பினுல் தம் வசமிழந்து நெகிழ்ந்து கண்ணீர் வார சுவாமிகளின் திவ்விய சொரூபத்தை நோக்கியபடியே பாடும்பாடல்களைக் கேட்டு நிற்பார் மனம் மீண்டு வரவும் ஒருப்படாது. தினமும் காலை தொடங்கி இராப் பன்னிரண்டு ஒரு மணிவரை இசைவாணர்கள் தம் இன்னிசைக் கீதங்களும் யாழ் முதலியவற்றின் ஓசைகளுமே கேட்கப்படுவன. இந்த சோழ வளநாட்டின் பெருமை, திருவையாற்றில் இவ்விழா வருடந்தோறுந் தவறாமல், தியாகராஜ சுவாமிகள் இறைவன் திருவடி நீழலை யடைந்த தினமாகிற தைமாசப் பூர்வபக்கப் பௌர்ணிமை பஞ்சமித்திதியிலே கொண்டாடப்பட்டு நவதாரமிலவரும் கணகறித்ததே. ஐந்துநாள் அல்லது பத்துநாள் வரை அங்கு கொண்டாட்டம் நடத்தப் பெறுகிறது.

இந்தியாவிற்கு இசைக்கலைதனி. இந்தியாவின் ஜீவநாடி அது. அல்லும் பகலும் சிறுவர், பெரியோர், எவரும் எவ்விடத்தும் தமது ஒய்வில் இசை நுகர்ச்சியை அநுபவிப்பதை யாம் கண்ணாரக் காண்கின்றோம். எழுத வாசிக்க அறியாத சிறியார் முதல் தமிழ்நாட்டுத் தலைவர் இராஜாஜீ போன்றவர்கள் வரை தியாகராஜர் கீர்த்தனைகள் எத்தனையோ அத்தனையும் ராகபாவம், நாமாதிய பிறழாமல் உணர்ந்து ரஸிக்கு மாற்றல் வாய்ந்தவர்கள். இந்தியாவில் நடக்கு மெவ்வொரு நற்செய்கைகளும் இவ் வின்னிசையோடுதான் நடைபெறும். இசை சொலலலன்றி இருநீர் வியனுலகமும் வசமென்னும் பழமைதே. இறைவன் இன்னிசையில் ஈடுபடுவன் பக்திவலைக் குட்படுவோன். இறைவன் இந்தியமக்களின் இசையில் மருண்டுபோகும் தன்தலைவனை இந்தியாவாகிய பாரதமாதாவுக்கு நல்கினுன். இந்திய சத்தியம் அழிவில்லை என்பின்ன பிறவுமதை ஏனைய நாடுகளுக்கு அறிவுறுத்தித் தன்மை தாங்கி நிற்பது யாம் கண்டு மகிழ்த்தக்கது.

இனி நமதிலங்கையை நோக்குவோமாயின், அதுவு மிந்தியாவோடிணைபிரியாது ஒன்றிநிற்க வேண்டியது. ஒருகால இந்தியாவும் இலங்கையும் ஒன்றாயிருந்து பின் அஃது கடலாற் பிரிக்கப்பட்ட தென்பர் சிலர். சரித்திரத்தை ஆராயப்புகுந்தால் இலங்கை இசையில் பண்டைநாளிற் பாண்டித்தியம் பெற்றதாகவே இருந்திருக்க வேண்டுமென்பதை யாம் அறியலாகும். இசையால் இறைவனை வென்ற இராவணன் ஆண்ட இலங்கை இது. ஆனல் இக்கால் இசையினை இலங்கையர் போற்றுது விட்ட பெருங் பாவத்தால் இவ்விடத்து விரல் மடக்கி எண்ணுவதற்குக்கூட ஒரு புகழ் பெற்றவித்து வானில்லை. இப்பெருங் குறையினை நிரப்ப இசைக்கல்வியை எம்மிடை வளர்க்க நாமெல்லோரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். இவ்விசைக் கல்வியைப் பெருக்குதற்கு இசைக்கழகங்கள் ஆங்காங்கு நிறுவப்படல் வேண்டும். அவற்றுக்கு அரசினர் உதவி மிக மிக இன்றியமையாதது. அவர்களின் உதவியைப் பெற யாம் பெரிதும் உழைக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் முன் ஒரு போதும் நிகழாத நிகழ்ச்சி ஒன்று சென்ற ஆண்டு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் 'தியாகராஜ சங்கீத சபையாரால்' நடாத்தப்பட்டது. அதுதான் யாழ்ப்பாணத்தாரால் சுவாமிகளின் திருநாளிற் கொண்டாடப் பெற்ற விழாவாகும். அவ்விழாவினை யாமெல்லோருங் கண்டு களித்தோம். இந்நாட்டின் பலபாகங்களிலும் இது போன்ற சங்கங்கள் நிறுவப்படல் வேண்டும். அச்சங்கங்கள் ஒன்றுசேர்ந்து அகில இலங்கைச் சங்கீத மகாநாடு (All Ceylon Musical Conference) நடாத்தி இலங்கைவாழ் மக்களனைவரும் இசையினை நுகர்ந்து வாழ்வுபெறச்செய்ய இறைவனை இறைஞ்சுகின்றேன். இவ் வருடமும் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் தியாகையர் உற்சவம் யாழ்ப்பாணத்திலுங் கூட நடைபெறப் போவதாக அறிகிறோம். அதை கேட்டு மகிழ்தற்குரிது. அன்பர்கள் ஒவ்வொருவரதும் ஒத்துழைப்பிலும் ஆதரவிலுமே இது போன்ற சதகருமங்களின் எழுச்சி தங்கியிருக்கிறது.

தியாகராஜ சுவாமிகள் 1759ம் ஆண்டு இறந்தார். இப்பெரியார் இறைவன் இசைவடிவின னெனக் கண்டு இசையால் இறைவனை வழிபட்டு அதையே தமது தொழிலாகக் கடைப்பிடித்தார். செயற்கருஞ் செயல்களைச் செய்த நம் சைவசமய குரவர்கள் தேவாரப் பண்களைப் பாடி வீடுபெற்றார்கள். அங்ஙனமே இவரும் சங்கீத வித்தியாகளும் காமுற பாடி அநுபவிக்கின்ற கீர்த்தனங்களைப் பாடிக் களித்தருளிச் செயற்கருஞ் செயல்கள் பல செய்து இறைவன் திருவடி நீழலைச் சேர்ந்தாரெனக் கூறுவர்.

திருவையாற்றில் அவர் சமாதி இன்னும் காணப்படுகிறது. ஆங்கு வருடந்தோறும் விழாக் கொண்டாடுதற் சிறப்பு மேலே கூறினும்.

இக்கலியுகத்திலே இசைபாடி இறைவன் திருநாமங்களைப் பஜனை செய்பவன் பரம முத்தியளிக்கப் படுவான் என்று சாஸ்திரங்கள் பகருகின்றன. அஃது எவ்வாறெனினும் காமுறுமெமது சமய குரவர்கள், தியாகையர் போன்ற பெரியார்களைப் பின்பற்றி இன்னிசையால் இறைவனை வழுத்தி வாழ்க்கையி னின்புற்று தன்னிலை யடைவோமாக.

நூற்குறிப்பு

மணிமலர்

இது, பண்டிதமணி முதுபெரும் புலவர் என்னும் பட்டங்களுடன் விளக்கும் திருவாளர். மு. கதிரேசச் செட்டியாரவர்களது அறுபதாம் ஆண்டு நிறைவுவிழாப்போது, செட்டிநாட்டுத் தலைவர் ராஜா. சேர். மு. அண்ணாமலைச் செட்டியாரவர்களின் தலைமையில் அளித்த கட்டுரைத் தொகுதியைக் கொண்ட சிறந்த வெளியீடாகும். இதன கண் திரு. மு. கதிரேசச் செட்டியார் (பாராட்டு) முதலாக அருட்கோலங்கள் ஈறுக உள அரிய வியாசங்கள் உயர்திரு. சுவாமி விபுலானந்தர், திரு. ச. சோமசுந்தர பாரதியார், திரு. ராகவ, ரா. இராகவையங்கார், திரு. ஆ. சிதம்பரஞ் செட்டியார், திரு. கா. சுப்பிரமணியபிள்ளை, D.K. சிதம்பரநாதமுதலியார், திரு. கோ. ம. இராமச்சந்திரச் செட்டியார் முதலிய பேரறிஞர்களால் எழுதப்பெற்று மிளிர்கின்றன. வியாசங்களாவன வெல்லாம் அக்றகாலய தனிச் சிறப்போடு கூடியன. சில வியாசங்கள் ஆராய்ச்சி முறையை அநுசரித்துள்ளவை. பிறை தொழுதல், சங்ககாலத்துப் பெண்பாற்புலவர்கள் என்னும் இருகட்டுரைகள் முறையே ஸ்ரீமதி. ஞானம்பாளம்மையார், ஸ்ரீமதி. இராசமணியம்மையா ரென்னும் பெண்மணிகளால் வரையப்பட்டுள்ளன. இக்கட்டுரைத்தொகுதியில், திரு. பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய "திருநாவுக்கரசர்" என்னுங் கட்டுரையைச் சென்றவாரம் வெளிவந்துள்ள இந்துசாதனப் பிரசுரங்களில் அநுவதித்துக் கொடுப்பதாக வெளியிட்டுள்ளோம். தொகுத்துக் கூறியிட்ட இக்கட்டுரைத் தொகுதி தமிழறிந்தோர் எவரும் அவசியம் படிக்கவேண்டிய தெனலாம். மிகத் தெளிவான அக்ஷரங்களில் உயர்ந்த "பளபளப்பான" தடித்த காகிதத்தில் அழகுற அச்சிட்டு அமைக்கப்பெற்றுள்ளது. 300 பக்கங்களை வரையறை கொண்டது; இதனை வெளியிட்டோர், திருவாளர்கள் பெ. ராம. ராம. சித. சிதம்பரஞ் செட்டியார், தீ. கந்தசாமி யென்னும் இருவருமாவர். அம்முகத்தில் பண்டிதமணி யவர்களுடைய பிரதிமைப் படம் விளங்குகின்றது.

பண்டிதமணி யவர்களின் உருவப்படத் திறப்புவிழா

பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரவர்களின் உருவப்படத் திறப்பு விழா வைபவத்தையும், ஆசசமயத்தில் சொற்பொழிவாற்றிய இராஜா, ஸேர். அண்ணாமலைச் செட்டியார், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சியாளர் திரு. ராக இராகவையங்கார், வலம்புரி, திரு. வ. ராம. இலக்குமணச் செட்டியார், மேற்படி கழகத் தமிழாசிரியர் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் பேசியவற்றையும், அப்போது அனுப்பப்பட்ட கடிதங்களையும் வாழ்த்துக்களையும் இவ்வெளியீடு கொண்டுள்ளதாம். ராஜா சேர். அண்ணாமலைச் செட்டியார் பிரதிமைப படமும், பண்டிதமணியின் படமும் இப்பிரதியின முகப்பிலுள்ளன.

"ஞானசம்பந்தம்"

இந்த அரிய சைவத் தமிழ் வெளியீடு திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவதாகும்; இதன்கண் சைவசமய சம்பந்தமான அரிய வியாசங்கள் அடங்கியுள்ளன; சைவசமய உண்மைகளையும் சைவப்பெரியாரையும் அறிதற்கு இவ்வெளியீடு சிறந்த சாதனமாகு மெனலாம். விபரீத கொள்கைகள் தலைகாட்டி வரும் இக்காலத்தில் இப்படியான ஒரு வெளியீடு சைவமக்களனைவர்க்கும் இன்றியமையாததாகும். எமது பார்வைக்குக் கிடைத்த பிரதி செ

தொடர்ச்சி 4-ம் பக்கம்

அரிசிக் கட்டுப்பாட்டுச் சீட்டுகள்

இலங்கையெங்கும் விநியோகம்

ஜன 5

அரிசி விநியோகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் இன்று இலங்கை முழுவதிலும் அரிசி விநியோகச் சீட்டுப் புத்தகங்கள் வழங்கப் படுமென்று அறியப்படுகிறது.

இலங்கையின் சில பகுதிகளில் சென்ற ஞாயிற்றுக்கிழமை பின்னேரமே மேற்படி அரிசிச் சீட்டுப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட இருந்தன. இப்புத்தகங்கள் விநியோகிக்கப்படுவதால் அரிசி விநியோகக் கட்டுப்பாட்டை உடனே நடைக்குக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்று அர்த்தமாகாது. அரிசி விநியோகக் கட்டுப்பாட்டை நடைக்குக் கொண்டுவரவேண்டிய அவசியமேற்படும் போது செய்யவேண்டிய ஏற்பாடுகளில் இதுவும் ஓர் அம்சமே யொழிய வேறொன்றுமில்லை.

குறித்த சீட்டுப் புத்தகங்கள் அவசியமேற்படும்போது, அரிசி விநியோகக் கட்டுப்பாட்டைச் சுலபமாக நடைக்குக் கொண்டுவரும் நோக்கமாகச் சென்ற ஜூலாய் மாதத்தில் தயாரிக்கப்பட்டது.

அண்மையிற் கரையோரப் பிரதேசங்களி லிருந்த சனங்கள் வேறிடங்களுக்குச் சென்றிருப்பதாற் குறித்த புத்தகங்களிற் பல உபயோகமற்றனவாகிவிடும்.

புதிய நாமாவலிகளையும் புதிய சீட்டுப் புத்தகங்களையும் தயாரிப்பதைப் பார்க்கிலும் இப்பொழுதுள்ள புத்தகங்களையே சனங்களிடம் கொடுத்து அவர்கள் எங்கேனும் ஒரு தினத்தில் அவற்றை உபயோகிக்கவிட்டுவிடுவது திருப்திகரமாக இருக்குமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அரிசி விநியோகச் சீட்டுப் புத்தகத்தைப் பெறும் ஒவ்வொருவரும் அதை மிகவும் சாக்கிரதையாக வைத்திருக்க வேண்டுமென்றும் தொலைந்தால் அத்தகைய சந்தர்ப்பத்தை முன்னிட்டும் பதிலுக்கு வேறு பிரதிகள் வழங்கப்படமாட்டாதென்றும் வற்புறுத்தப்படுகிறது.

ஒன்றுக்கு அதிகமான சீட்டுப் புத்தகம் வைத்திருப்பது குற்றமாகும். எவராவது இரண்டு புத்தகங்களைப் பெறுவதற்கு எவ்விதத்திலும் முயற்சி செய்தால் அதுபாரதூரமாகக் கருதப்படும்.

சுமத்திராவுக்கு அருகில் விமான விபத்து

கல்கத்தா, ஜன 3—

சுமத்திராவுக்குச் சமீபமாக ஒரு விமானம் விபத்திற்குள்ளாகியது சம்பந்தமாக பிருத்தானிய ஓவர்ஸீஸ் கோப்பரேஷன் திருவாளிகள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். தூரக்கிழக்கிற் போக்குவரத்தை நடத்திக்கொண்டிருந்த ஒரு விமானம் விபத்துக்குள்ளாகியது. இதன் விளைவாகப் பிருத்தானிய விமான சேவையைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் கொல்லப்பட்டிருக்க வேண்டுமென நம்பப்படுகிறது. நான்கு விமானிகளும் காயமின்றித் தப்பினர். விமானத்தில் வேறு பிரயாணிகள் யாரும் இல்லை. ஆயின், பிருத்தானிய விமானப் போக்குவரத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் மாத்திரமே இருந்தார்கள்.

வீட்டுப்பணி கற்பிக்கவேண்டியதன் அவசியம்

Mrs. A. Mylvaganam, Principal, Ramanathan Traioing School

(பரிசுபெற்ற கட்டுரை)

வீட்டுப்பணிக் கல்வி ஒவ்வொரு பெண்பிள்ளையின் கல்வியிலும் அத்தியாவசியமான ஒருபகுதியாயிருத்தல் வேண்டும். வீட்டுச் சீவியத்திற்கும் பாடசாலைச் சீவியத்திற்கு மிடையிலுள்ள வெளியை நிரப்புவதற்குதவ படைத்தே. ஒரு குடும்ப நிர்வாகம் அவ்வீட்டு மனையாளையே பொறுத்தது.

"மனைத்தக்க மாண்புடைய
ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

இக்குறளினது பொருள் வன்றிக் கவனிக்கற் பாலது.

வீட்டுப்பணிக் கல்வி பெண்களுக்குச் சிறப்பாகக் கற்பிக்கவேண்டிய ஒரு பாடமாகும். இக்கல்வி பாடசாலைகளிலேயே நன்கு கற்பிக்கப்படல் வேண்டும். இக்கல்வியின் முக்கிய நோக்கம், இல்லாளொருத்தி தன் குடும்ப நிர்வாகத்திற்கேற்ற பல செயல்களைப் பயிற்சி செய்வதன் மூலம் ஒரு இல்லத்தைச் சௌகரியமாக அமைக்கும் முறையைக் கற்றுக் கொள்வதே. இல்லமைத்தல் இலகுவான ஒரு காரியமன்று. அது பலநாட் பயிற்சியினுல் எய்த வேண்டிய ஒரு திறமையாகும். உலகிலே பற்பல தொழில்களும் செவ்வனே நடைபெறுதற்காதாரமாகச் சில பிரமாணங்கள் அடிப்படையாக உள்ளன. அதேபோல இல்லமைப்பதும் அதற்குரிய பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படல் வேண்டும். சௌகரியமான ஒரு இல்லத்தில் வசிப்பவர்கள் சுகதேகிகளாகவும், சுத்தம், அழகு முதலியவற்றை விரும்புவராகவும், தங்கள் சுகத்தைப் பேணுவதற்காகிய நல்லுணவு, சுத்தமான காற்று, தேகாப்பியாசம், ஆறுதல் முதலியவற்றை ஏற்ற பிரகாரம் பெற்றுக்கொள்ளத் தக்க வசதிகளையுடையவராகவுமிருப்பர்.

இல்லமைப்பது உலகிலே எல்லாத் தொழில்களிலுஞ் சிறந்ததென்பதை நந் தலைவர் "உவுட்ரோ உவில்சன்" (President Woodrow Wilson) என்பார் எடுத்துக் கூறியிருக்கின்றனர். "இல்லமைத்தலோடு ஒப்பிடக்கூடிய வேறு சிறந்த தொழில் எதுவும் உலகினில்லை," என்பது அவர் கூற்றாகும். ஒரு குடும்பத்தை முறைப்படி நிர்வகிக்க வேண்டுமாயின் காலத்திற்குக்காலம் வெளிவரும் புதிய முறைகளை, நன்கறிந்து, பழையனவற்றிலும் சிறப்பாகவிருப்பின் புதியனவற்றை உபயோகப்படுத்திக் கொள்ளல் வேண்டும். வீட்டை ஒரு முழுப்பொருளாகக் கருதி அதை அமைப்பதற்கேற்ற திட்டமான நோக்கங்களை ஆதாரமாகக் கொண்டு அதை அமைக்க வேண்டும். இவ்வாறு நோக்கங்களுடன் செய்யப்படும் வேலையிலேற்படும் "பிரச்சினைகளை" இல்லாள் தன்னம்பிக்கையுடன் தீர்க்கப் பயிற்றப்படல் வேண்டும். பிரச்சினைகளைத் தீர்ப்பதாலேற்படும் அபிப்பிராயங்கள் உண்மையானவையாக இருக்க வேண்டும். ஒரு பிரச்சினையைக் கவர்ச்சியுடன் ஆராய்ந்து அவதானத்துடன் தீர்த்துக் கொள்ளும் முறை சாஸ்திர நெறிப்பட்டது. உண்மைகளைப் பதிவு செய்தும் பரீட்சைகள் நிகழ்த்தியும் முடிவுகளைப் பெறவேண்டிய எந்தப் பாடத்திற்கும் சாஸ்திரமுறை மிக உபயோகமானது. வீட்டுப்பணிக் கல்வியிலேற்படும் பிரச்சினைகளுக்கும் இம்முறை அவசியமாகின்றது. ஆகையால் வீட்டுப்பணிக் கல்வி கற்பிப்பதற்காக வரையறுக்கப்படும் பாடப் பிரிவுகள் (Courses) பரீட்சாமுறை அடங்கியனவாகவும், சுய அனுபவங்களைக் கொண்டு உண்மைகளைத் தெளியக்கூடியனவாகவும் ஆராய்ச்சியின் பேறாக விதிகளை உண்டாக்கக் கூடியனவாகவு மிருத்தல் வேண்டும்.

ஒரு பெண்பிள்ளை எத்தத்தொழிலையும் புரியும்போது "இதுதானு இத்தொழிலைச் செய்யக்கூடிய மிகச் சிறந்த வழி, இதைவிட வேறொன்று விசேஷமாக இருக்க முடியாதோ?" என்று தனக்குட்டானே வினவுங் காலத்திலே சாஸ்திர மனுேநிலையுடையவளாயிருக்கிறுள். தான் செய்யும் வேலையிற் சிறந்த ஒழுங்குமுறை ஏற்படும் வரையில் அவள் திருப்தியடைய மாட்டாள். புதிய உணவுகளைத் தயாரிக்கும் முறைகளைப் புத்தகங்களிலிருந்து அறிந்து அவற்றைப் பிரயோசனப்படுத்தவும், வீட்டிலே தயாரிக்கும் பொருள்களுக்கும் விலைக்கு வாங்கும் பொருள்களுக்குமுள்ள விலை, வேலை, நேரம் முதலியவற்றில் ஏற்படும் வித்தியாசங்களை அறிந்து சிக்கனமானதும் செலவுச் சுருக்கமானதும் பிரயோசனமுடையதுமான பொருளைத் தீர்மானித்து இலைத்திற்குத் தேவையானவற்றை உபயோகப்படுத்தல் சாஸ்திர ஆராய்ச்சி அறிவுடையவளென்பதைக் காட்டும். வீட்டுப்பணி கற்பித்தலில் சாஸ்திர முறைகள் கையாளப்பட்டால் ஆராய்ச்சி மாணவரது பழக்கச் செயலாக வந்துவிடும்.

வீட்டுப்பணிக் கல்வி பாடசாலைச் சீவியத்தில் எந்தப் பருவத்தில் கற்பிக்கப்படலாம் என்ற வினுவொன்று எழுகின்றது. பிரதம பாடசாலை மாணவருக்கு இறுதி இரண்டு வருஷங்களிலும் கற்பிக்கலாம். இவர்களது தேகமும் மனமும் ஓரளவு விருத்தியடைந்து தொழில் செய்யக்கூடிய தசைநார்த் திறனும் அறிவு விருத்தியுமுடையரா யிருப்பர். இவர்களது வேலை பிற்கால சீவியத்திற் காயத்தமாய்ச் செய்யப்படல் வேண்டும். இலகுவான முயற்சிகளை முதற்றரமாகப் பயிற்றல்வேண்டும். வீட்டுப்பணிக் கல்வித் திட்டம் ஒரு இல்லாளின் குற்றேவல்களிலிருந்து ஆரம்பமாகி உடைகள் சலவை செய்தல், சமையல், குடும்ப நிர்வாகம், இல்லமைத்தல், குழந்தைகள் பராமரிப்பு, நோயாளிகள் பராமரிப்பு முதலியவற்றையும் படிப்படியாகச் சேர்த்துக் கொள்ளக் கூடியதாக விருக்க வேண்டும். சமையற் பகுதிக்கு நேரம் கூடக் கொடுக்கப்படல் வேண்டும். ஒரு கிழமையில் ஒரு நாள் முழுவதும் வீட்டுப்பணி கற்பிக்கும் ஒழுங்கு சிறப்பானது. உதாரணமாகச் சலவை செய்வதிற் பயிற்சி பெறும் மாணவர் முழுநாளும் வேலை கொள்ளப்படுவது சிறந்த பயிற்சியைப் பெறுவதற் குதவியாக விருக்கும். காலையிலே புடவைகளைச் சலவை செய்து காயவிட்டுப் பின்னேரத்திலே மினுக்கி மடித்து வைக்கலாம். அரை நாள் வேலையாயின் மாணவர் உடைகளை ஈரமாகவும் அரைகுறையான வேலையோடும் வீடு கொண்டு செல்ல வேண்டியதாக விருக்கும். சமையல் வேலையாயிருந்தாலும் ஒரு நேரத்திற்கான போசனத்தைச் சமைத்து அதைப் பரிமாறி இடத்தைச் சுத்தஞ் செய்தல் காலையிலும் பின்னேரத்தில் எஞ்சிய உணவைப் பிரயோசனப்படுத்தும் வகை, இலகுவான சமையல் முறைகள் கலந்துரையாடப்படும், பயிற்சி செய்யப்படும் வரலாம். வீட்டு நிர்வாகப் (House Keeping) பாடங்கள் முழுநாள் வேலையாயிருப்பின் பூரணமான பயிற்சியைப் பெறக் கூடியதாக

தொடர்ச்சி 4-ம் பக்கம்

திருவாசகத்துள் மிளிரும் அம்மையப்பர் தொன்மைக் கோலம்

[திரு. K. ஞானசம்பந்தம்பிள்ளை, தருமபுரம்]

பண்டுதொட்டே இந்திய நாடு சிவவழிபாட்டிலே மிகப் பயின்றுடையதாம். அதிலும் நம் தமிழ்நாட்டிலே மிகத் தொன்மைக்காலத்திலிருந்தே செம்பொருளாகிய சிவத்தோடு, வல்லமையாகிய அம்மையுருவும் ஒன்றாய் இணைத்து வைத்துப் போற்றிவந்தனர் தமிழ் மக்கள். ஏன்? எல்லாம் வல்ல இறைவன் உயிர்களை உய்விக்க எடுத்த கோலமே அங்ஙனமென நூல்கள் முறையிடுகின்றமையாலென்க. அவற்றுள் ஒன்றிரண்டு சான்றுகள் காண்டு வருகின்றன.

சிவபிரானது செம்பாகம் உமையம்மையார் என்பது சைவ சமய உண்மைகளுள் ஒன்று. ஏன்? சிவமும் சக்தியும் பிரிவற நின்றே உலகியல் நடைபெறுகின்றதாகலின். இதனை விளக்கவே,

"அம்மையப்ப ரேயுலகுக் கம்மை
யப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்
பர்—அம்மையப்பர்
எல்லா வுலகிற்கும் அப்புறத்தார் இப்
புறத்தும்
அல்லார்போல் நிற்பர் அவர்."

.........."ஆரா தியே
ஆர்தத அயரால் அம்பிகையோ
டெவ்விடத்தும்
காத்த லவன்கடனே காண்."

எனத் திருக்களிற்றுப் படியாரினும்,

".......... அம்மையோ டப்பனுமச்
செறிவொழி யாது நின்ற சிவம்"
"......சத்திதான மாமுங் காழ்ப்பும்
இருமையும் போல மன்னிச் சிவத்
தினேடியைக்து நிற்கும்"
"மாதொரு பாகனர்தாம் வருவர்"

எனச் சிவஞான சித்தியாரினும், இன்னோரன்ன பல திருவாக்குகள் எழுந்தன.

இக் குறிப்புக்களைச் சைவத்திருமுறைகளில் யாண்டும் காணலாம்.

"பத்தர் வீரன் மடவான் பாகமா
......அம்மான்"
"பக்தனவும் விரலா ளொருபாக
மமர்ந்தருளி"
"பெண்ணினல் லாளொடும் பெருந்
தகை யிருந்ததே"

என ஆளுடைய பிள்ளையார் இவைபோற் பல இடங்களிலும் தமது தேவாரத்திலே வைத்தருளியிருக்கின்றனர்.

திருப்பெருந்துறையிலே சிவபிரான் திருவருளைக் குருந்த நீழலிற் கொள்ளை கொண்டருளிய மாணிக்கவாசகப் பெருமான் தாமருளிய திருவாசகம் எனனும் ஒப்பற்ற நூலிலே திருக்கோத்தும்பியிலே, இறைவனுக்கும் அம்மைக்கும் உரிய திருக்கோலங்களை வரிசை முறையாக,

"தோலுந் துகிலுங் குழையுஞ்
சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும்
பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையு முடைத்
தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய்
கோத்தும்பீ"

என விளக்கியருளினர்.

இறைவன் இத்திருக்கோலம் அம்மையோடு கூடியதாகலின் அவன் திருமேனியின் ஒர்பால், தமக்குரிய புலித்தோலாடை விளங்குகின்றது; இடப்பால் அம்மைபாகமாகலின் பட்டாடை மிளிர்கின்றது. ஒரு மருங்கு திருச்செவியிலே குண்டலம் பொலிகின்றது. மறுசெவியிலே தோடு மின்னுகின்றது. ஒரு பாகத்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ௵ மார்கழி௴ ௨௰௪ வியாழக்கிழமை

இந்தநேரத்திலா கடைப் பிரமாணம்?

மகா கொடிய யுத்தம் நடக்கும் இக்காலமானது உலகத்திலுள்ளார் எல்லார்க்கும் எல்லா வகையாலும் கஷ்டத்தை ஆக்கிவிட்ட காலமாய் விட்டது; இப்பொழுது நாங்கள் படுங் கஷ்டங்களை எங்கள் காலத்தில் நாங்கள் முந்திப்பட்டதுமில்லை; எங்கள் மூதாதையர் இப்படியான கஷ்டங்களை அக்காலத்திற் பட்டனரெனக் காலங்கண்ட முதியோர் சொல்லக் கேட்டதுமில்லையெனலாம். இனி இந்த இலங்கையாகிய நம் நாடெனிலோ தன்னிடத்தில் வசிக்கும் மக்களின் சீவியத்திற்காகிய இன்றியமையாப் பொருள்களுக்குத் தானும அயல்நாட்டையும் அந்தியநாடுகளையும் நம்பியவண்ண மிருப்பது. இந்த இலங்கையிலும் நாங்கள் வசிக்கும் யாழ்ப்பாணம் அதிக தாரித்திரியத்தோடு கூடியதாகும், உணவிற்கு இன்றியமையாப் பொருள்களுள் உப்புந் தேங்காயும் அதன் எண்ணெயுந்தான் இந்த யாழ்ப்பாண மக்களுக்குப் போதியனவாகவுள்ளன. ஏனைய பொருள்கள் சில உண்டெனினும் அவை இங்குள்ள மக்களின் உபயோகத்திற்குப் போதா; வேற்றுநாடுகளிலிருந்தேவந்து இறக்குமதியாக வேண்டியன. இங்குள்ள மக்களுட் பெரும்பாலார் அன்றடித்து அன்று வாயிலிடும் நிலைமையிலுள்ளவர்கள்.

இப்படிப்பட்ட நிலையிலுள்ள யாழ்ப்பாணத்து மக்கள் யுத்தம் வந்தபின் படுஞ் சங்கடம் கொஞ்சமல்ல; இங்குள்ள மக்களுள் ஒரு கூடிய தொகையினர் தம்மவர் சிங்கப்பூர் மலாய்நாடு முதலிய நாரித்த தேசங்களில் உத்தியோகம் பார்த்துப் பெற்ற ஊதியத்திற் பெரும்பாகத்தை மாசந்தோறும் இங்கே அனுப்பிவர, அதனைப்பெற்று வறுமையிற் செம்மையாகக் காலங்கழித்து வரலாயினர்; இன்னுஞ் சிலர் முந்தி அங்கு உத்தியோகம் பார்த்து இளைப்பாறி உபகாரவேதனம் பெற்றுக்கொண்டு மீண்டு இங்கு வந்து வசிப்பவர்கள்; யப்பானியர் சிங்கப்பூரையும் மலாய்நாட்டையுந் தாக்கத் தொடங்கிய பின் மேலே சொல்லப்பட்டவர்கள் படும் மனச் சஞ்சலஞ் சற்றல்ல.

இவர்கள் விஷயம் இப்படியாக, யுத்தந் தொடங்கிய பின் இங்கே உணவுப் பொருள் விலை, உடைக்குரிய பொருள்களின் விலை, இன்னும் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் எவைகளோ அவைகளின் விலை முதலியன வெல்லாம் இருமடங்கும் மும்மடங்கும் நான்மடங்கும் ஏறலாயின; தொழிற்பஞ்சம் அதிகரித்துக் கொண்டது; உணவு விஷயமாக நாளைக்கென் செய்வதென்ற கவலை ஏழைகள் எல்லார் மாட்டுங் குடிகொண்டு விட்டது; இவற்றோடு பலவகையான கவலைகளும் வந்து சேர்ந்துகொண்டன. சுருங்கச்சொல்லுமிடத்து எங்கள் ஊர் இந்தச் சமயத்தில் "ஆவினமழை பொழிய இல்லம் வீழ...." என்ற பழைய பாட்டிற்கு இலக்கியமாகக் கிடக்கின்றது; நாங்கள் வசிக்கும் ஊரின் இப்பொழுதுள்ள மோசமான நிலைமையை நாங்கள் அறிவோமே யொழிய பல நூற்றுக்கணக்கான மைல்களுக் கப்பாலிருக்கும் சிங்களமந்திரியார் இவ்வூரின் நிலைமையை உள்ளபடி உணர்வாரென்றும் அப்படித்தான் உணர்ந்தாலும் அநுதாபங்கொள்ளுவாரென்றும் நாங்கள் எதிர்பார்த்திருத்தல் வியர்த்தமாகும். அந்தத் தொழிற்பகுதி மந்திரி யாழ்ப்பாணத்துள்ள மக்களாகிய எங்களுடைய ஓலத்தைப் பொருட்படுத்தாமலும் விண்ணப்பத்தைக் கேளாமலும் இப்பட்டின சங்கத்தார் "இது வேண்டாம் வேண்டாம்; இந்தப் பட்டினத்துக்குத் தேவையில்லை" என்று தடுத்ததைச் சிந்தியாமலும் கடைப்பிரமாணத்தை இங்கே கொண்டுவந்து புகுத்திவிட வேண்டுமென்று பிடிவாதமாக நிற்கிறார்; அம்மந்திரி சொல்லும் நியாயம் இங்குள்ள கடைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கட்கு இப்பொழுது ஓய்வில்லாததால் போதிய ஓய்வு கொடுக்க வேண்டுமென்பதே; ஆனதால் அந்த நோக்கம் பிழையானதென நாம் மறுக்க நியாயமில்லை; இந்த ஊர் வழக்கம் கொள்கை என்னுமிவைகளை உத்தேசித்து அவைகளுக்குத் தக, பண்டங் கொள்வோராகிய சனங்களுக்கும் கொடுப்போராகிய வியாபாரிமாருக்கும் கடையில் நின்று வேலை செய்வோருக்கும் இயன்றவரையில் வசதியாக ஆகவேண்டிய ஏற்பாட்டை அதிகாரிகள் செய்யத்தான் வேண்டும்; ஆனால் அதற்குச் சமயம் இதுவா என்பதுதான் கேள்வி; எங்கள் அரசினரே ஆண்டுக்கொரு முறை தங் கீழுள்ள உத்தியோகத்தருக்குக் கொடுத்து வந்த நத்தார்க்கால விடுதலையை இந்த வருடத்திற் சுருக்கிவிட்டனர்; புகைரதப் பகுதியில் இக்காலத்தில் உதவி வந்த பிரயாணிகளுக்குச் சௌகரியமான மலிவு சீட்டுக்கள் முதலியவற்றை இப்பொழுது ஒழித்து விட்டனர்; இன்னும் பல கட்டுப்பாடுகளைச் செய்யலாயினர்; இவைமாத்திரமா; இலங்கையில் அரசாங்கவிஷயமாகச் செய்யவேண்டிய திருத்தங்களை, யுத்தகால மென்ற காரணம்பற்றி லண்டனிலேயுள்ள குடியேற்றநாட்டு மகாமந்திரியார் தவணையிட்டு விட்டனர்; இலங்கையிலும் செய்யப்படவேண்டிய பகிரங்கப்பகுதி வேலைகளும் பொதுநன்மைக்கான அரசினரால் செய்யப்பட வேண்டிய கருமங்களும் பல தவணையிடப்பட்டிருக்கின்றன; இவைக்கு உதாரணமாக நாங்கள் சஞ்சரிப்பனவாகிய தெருவீதிகளின் இப்போதைய ஈனநிலையை நாங்கள் பார்த்துத் தெளிந்து கொள்ளலாம். இவைகளெல்லாம் எதற்காக? இந்த யுத்தத்திலே சிக்கனவு வேண்டுமென்றது ஒரு காரணம்; இவைகளைத் தொன்மைபோல் அமைப்பதற்கு வேண்டிய உபகரணங்களை இந்தச் சமயத்தில் வருவித்தல் கஷ்டமென்பது இன்னுமொரு பிரதான காரணமாகும். இப்படியெல்லாமிருத்தலால் இக்கடைப் பிரமாணத்தை இந்த யுத்தகாலம் வரையிலாவது அநுசரணைக்குக் கொண்டு வராது விடுதல் நன்றென நினைக்கிறோம்.

பண்டிதர் மஹாலிங்கசிவ ஞாபக நிதி

இந்த நிதிக்குச் சேர்ந்த பணத்தை விநியோகஞ் செய்யும் வழிவகைகளைத் தீர்மானிப்பதற்கு ஒருபொதுக் கூட்டம் ஜனவரி மாதம் 18-ந் தேதி ஞாயிறு முற்பகல் 9.30 மணிக்கு வண்ணார்பண்ணை இந்துக்கல்லூரி மண்டபத்தில் கூட்டப்படும். நிதிக்குப் பணமளித்த அன்பர்களையும் பண்டிதர்பால் அபிமானமுடையவர்களையும் இக்கூட்டத்திற்கு வருமாறு விநயத்துடன் வேண்டுகிறேன். இன்னமும் பணந்தரவேண்டிய அன்பர்களும் பணஞ்சேர்த்தோரும் அப்போது தனாதிகாரியிடம் பணத்தைத்தயவுசெய்தொப்புவிக்கவும்.

நிர்வாகசபைக் கட்டளைப்படி.
அ. பொன்னையா
ஷை நிதித்தலைவர்

Mis 166 8-1-42

உலகம் பலவிதக்கதை

(முற்றொடர்)

"மகளிர்க்கருங்கலம் மானம்"

முதலியார் தம் முன்னிலையில் மிக்க விநயத்துடனிருக்கும் தமது இளைய மகளைப்பார்த்து "கண்ணே, சுந்தரம், நீங்கள் இருவரும் வீட்டைவிட்டு ஊரைவிட்டுப் புறப்பட்டு வந்தாலும் எங்கள் குடும்பத்திற்குப் பாரம் பரியமாக உரிய மானம் மரியாதையையும், எங்களூர்ப்பெண் மக்களிடத்து இயல்பாக அமைந்த கௌரவத்தையும் பாதுகாத்து நடந்து வருகிறீர்கள்; ஆண் பிள்ளையைப் பெற்றவர்கள்தாமும் பெண் மக்களாகிய உங்களைப் பெற்ற என்னைப்போற் சந்தோஷமடைய மாட்டார்களென்று நினைக்கிறேன்; எந்தக் கருமத்திலும் தெய்வம் உங்களுக்குத் துணையாக நிற்கின்றது; மாசற்ற மக்களைப் பெற்ற பிதா மாதாக்களுக்கு எக்காலத்துஞ் சஞ்சலமில்லை யென்று சொல்லுவார்கள்; அதனை நான் இப்பொழுது என் அநுபவத்திற் கண்டேன்; நிற்க, மகளே, உன் அக்காள் உன் விஷயமாக ஏதோ சொல்லுகிறாள்; உன் அக்காளே உனக்குத் தாயும் தமக்கையுமாயிருக்கிறாள்; நீங்கள் ஒருவர்மீதொருவர் பாராட்டும் அன்பு உங்களைப் பெற்றவனாகிய எனக்கு உங்கள் மீதில்லையே யென்று நான் சொன்னாலும் பிழையாகாது; என்னைக் காட்டிலும் உன் தமக்கையே உன் நன்மையை அதிகம் விரும்புபவள்; ஆனதால் அந்த விஷயமாக நான் ஏதும் முயற்சி செய்தல் உனக்குச் சம்மதமாக இருக்குந்தானே, மகளே" என்று ஆதரவு பெருக மெல்ல மெல்ல வினவினர். சுந்தரம் பதிலேதுஞ் சொல்லாது சற்றுநேரஞ் சும்மா விருந்தாள்; ஏதோ யோசித்தாள்; மகிழ்ச்சியோடுகாணப்பட்ட அவள் முகம் மாறிக் கவலையோடு காணப்பட்டது; கண்களில் நீர் ததும்பியது; இவற்றையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த முதலியார் "கேட்கத்தகாத கேள்வியைப் பிள்ளையிடத்தே கேட்டுவிட்டேனோ" என்று சந்தேகங் கொண்டு சஞ்சலப் பட்டார்; "என் செல்வமே, நீ கவலைப்படாதே; உன் எண்ணத்தை அறியக் கேட்டேன்; உனக்கு இஷ்டமில்லையெனக் கண்டால் நான் ஒரு போதும் அப்படியான விஷயத்திலே தலையிடமாட்டேன்; என் அருமையான மகளே, நீ கலங்காதே, உங்கள் இருவருடைய சம்மதத்திற்கு மாறாக நான் முந்திக் கருமஞ் செய்யத் தொடங்கிப் பட்டபாடும் கெட்டகேடும் போதுமடியம்மா" என்று தம் மகளைத்தேற்ற முயன்றார்; தான் வருந்தத் தன் தந்தை வருந்துவதை மகள் அவதானித்தாள். "ஐயா மங்களம் பெற்ற பிள்ளைதானே, ஆனதால் எதற்கும் உடன்படுவாள் தானே என்று நினைத்தா, எங்கள் அருமையானஐயா! நீங்கள் என்னை இந்தக் கேள்வி கேட்டீர்கள்? என் அக்காள் உங்கள் பிள்ளையாக இருந்தாலும் என் அருமையான அக்காளின் அருமை பெருமைகளை உள்ளபடி உங்களைப் பார்க்கிலும் நான் அதிகம் அறிவேன் ஐயா, சொல்லுகிறேன் என்று மனம் வருந்தாதீர்கள்; நீங்களும் நானும் முற்பிறவியிற் செய்த புண்ணியந்தான் என் அக்காள் உங்களுக்கு மகளாகவும் எனக்குத் தமக்கையாகவும் வந்து பிறந்தது; எங்கள் அருமையான ஐயா, இன்னுங் கேளுங்கள்; அன்று ஊரை விட்டுப் புறப்பட்டது என் தமக்கையல்ல, நானே அப்படிப் புறப்பட்டவள்; என் அருமையான சகோதரி அந்தக்கல்யாணத்தைக் குழப்ப வேண்டாமென்றும் அதற்குச் சம்மதிக்கும்படியும் ஊரைவிட்டு அந்த நேரத்திற் புறப்பட்டுப் போவது சரியல்லவென்றும் எனக்கு எவ்வளவோ புத்தி சொன்னாள்; நான் பிடிவாதமாக நின்றதைக் கண்டு என் அருமையான உடற்பிறப்பு என்னை இரந்து வேண்டினாள்; நாங்கள் இப்படி இந்த நேரத்தில் வீட்டைவிட்டுப் போய் விட்டால் எங்கள் பெற்றோர் வருந்துவார்கள், அயலட்டத்திலுள்ளவர்கள் பழி சொல்லுவார்கள், எங்கள் சந்ததிக்குத் தீராவசையாக வந்து முடியும் என்று என் அருமையான சகோதரம் எனக்கு எவ்வளவோ புத்திகளையெல்லாம் புகட்டி என்னை இரந்தது; அப்படியிரந்தபோதும் அந்த நேரத்திற் கொண்ட மனவைராக்கியத்தினால் "அக்கா, நீங்கள் தடுத்தால் நான் என்னுயிர் விடுவேன்; வேறு என்னால் என்ன செய்ய முடியுமென்று உறுதியாகச் சொன்னேன்; என் தமக்கை பயந்து விட்டாள்; உடனே தானும் என்னுடன் புறப்பட்டு வருகிறேனென்று சொல்லிப் புறப்பட்டு வந்தாள்; ஒரு விசுவாசமான ஆண் துணையின்றிக் குமர்ப்பிள்ளைகளான நாங்கள் தனியே புறப்படக் கூடாதென்றெண்ணியே, எங்கள் இரண்டு பேரையும் குழந்தைப் பருவந் தொடக்கம் எடுத்து வளர்த்த இராமன்னையும் துணையாகக் கூட்டிக்கொண்டு புறப்பட்டோம்; "மகளிர்க்கு அருங்கலம்மானம்" என்ற விரதத்தை எந்த நேரமும் அநுட்டித்து வருகிறோம்; ஆண்டவனருளால் எங்களுக்கு ஒரு குறையும் இல்லை; எங்கள் அருமையான ஐயா, நீங்கள் கவலைப்பட வேண்டாம்; உங்களைவிட்டு எனக்குக் கவலை வேறொன்றுமில்லை; என் தாயார் செய்யத் துணிந்த அடாத கருமத்திற்கு நீங்களும்முந்திஉடன் பட்டுவிட்டீர்களேயென்றதொருகவலை தான்; அதையிட்டு நீங்கள் இப்பொழுது கவலைப்படவேண்டாம்; ஐயா, இந்த நேரத்திலும் என் அரிய தமக்கையார் இருக்க அவரைவிட்டு என் கருமத்தைப் பற்றி யோசிக்க வந்தீர்களே யென்பதைப் பற்றித்தான் வருந்துகின்றேன்" என்று தன் தகப்பனாரை அதிகம் மனம் வருந்தவிடாமல் இதமாகச் சொல்லி முடித்தாள் சுந்தராம்பிகை.

கன்றுதுள்ளிப் பசுமீது விழ்வதுமுண்டு

முதலியார் தம் மகள் சொன்ன நியாயங்களைக் கேட்டு மனம் வருந்தினர்; தம் பிள்ளைக்குள்ள அறிவு தமக்கில்லையேயென்று நாணமடைந்தார். "மகளே, நான் நினைத்ததும் சொன்னதும் முழுத் தவறும்; நான் என்ன செய்வேனடியம்மா! எங்கள் ஊரிலானால் என் உற்றார் உறவினர் நண்பர் பெரியோர் ஆகிய இப்படிப்பட்டவர்களுடன் உங்கள் விவாக விஷயத்தையிட்டு யோசித்துச் செய்யலாம்; இங்கே நான் தன்னந்தனியே வந்திருக்கிறேன்; உங்களைத் தேடிக் காணும்வரையிற் கவலையோடு கூடியவனாகத் திரிந்து கண்டபிறகுதான் மனஆறுதல் அடைந்தேன்; என் அருமை மக்களாகிய நீங்கள் இருவரும் இருக்கும் யோக்கியமான நிலையைக் கண்டு ஆநந்தங் கொண்டேன்; என்மகளே! இங்கு நான் உங்களைவிட்டு வேறுயாருடன் எந்தக் கருமத்தையும் யோசிப்பது? ஆனதால் உன்கருமத்தை உன் அக்காளுடனும்; உன் அக்காள் கருமத்தை இனி உன்னுடனும் யோசிக்கும் படியாகத்தான் உன்னை இங்கே கூப்பிட்டேன், கண்ணே, என்னைக் குறைசொல்லாதேயடியம்மா, மங்களத்தின் வன் சொற்கள் என்னை வருத்துவதைக் காட்டிலும் என் மக்களாகிய உங்கள் இன்சொற்கள் என்னை அதிகந் துயருறுத்துகின்றன, கண்ணே" என்று சொல்வதற்கிடையில் "ஐயா, நீங்கள் கவலைப்பட வேண்டாம்; கன்றுதுள்ளிப் பசுவில் விழுவதுமுண்டு ஐயா, என்கருமத்தை எனக்கு முந்திச் சொல்லாமல் அக்காவின் கருமத்தை என்னுடன் பேசிவிட்டு நீங்கள் பின் என் கருமத்தைச் சொல்லியிருந்தால் நான் உங்களைக் குறைகூறியிருக்க மாட்டேன் ஐயா, எங்களுக்கு ஐயாவும் அம்மாவும் நீங்கள் தானே நான் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிக் கும்பிடப்போன மகளைத் தகப்பனார் தடுத்து, "மகளே, நான் உன்னைப் பொறுதி கேட்கவேண்டிய இடத்தில் நீயா என்னைப் பொறுதி கேட்பது; வேண்டாங் கண்ணே, என் மக்களுள் புத்தியிற் சிறந்தவர் யாரென்று தெரியாமல் தியங்குகிறேனடியம்மா" எனக் கூறித் தன் இளையபிள்ளையின் கரங்களைக் கூப்பியபடியே பிடித்துத் தம் கண்களில் ஒற்றி மகிழ்ச்சியடைந்தார். "மகளே, உன் அக்காள் விஷயமாக உன்னோடுதான் நான் யோசிக்கப் போகிறேன்; உங்கள் பெரிய அத்தானைக் கல்யாணஞ் செய்வதற்கு உனது அக்காளுக்குச் சம்மதமா யிருக்குமா? அப்படிச் சம்மதப்படாத சமயத்தில், கண்ணே, நீதான் உன் தமக்கையைச் சம்மதிக்கச் செய்யவேண்டும்" என்றார் தகப்பனார்; "ஐயா, என் அக்காளிடத்தில் எங்களெல்லாரைக் காட்டிலும் விசேஷமான ஒரு குணமுண்டென்பதை நான் பிறகு பிறகுதான் அறிந்தேன்; நானுக, என தாயாக, நீங்களாக, வேறு எங்கள் மைத்துனராக யாராயிருந்தாலும் எங்களுக்கு ஒருவர் குற்றஞ் செய்தால், எங்கள் எண்ணத்திற்கு மாறாக நடந்தால், அப்படிச் செய்தவரை வெறுப்போம், கோபிப்போம், அவருடன் பகைபாராட்டுவோம்; ஆனால் என் அருமைத் தமக்கையார் ஒருபோதும் அப்படி எங்களைப்போல் எதனையும் எண்ணிக் கொள்வதில்லை; "எல்லாம் விதியின் பயன்; எய்தவனிருக்க அம்பை நோவானேன், நாம் ஒருவரையுங் குறைசொல்ல வேண்டாது" என்ற மேலான கொள்கை பூண்டவர் என் அருமைத் தமக்கையார். ஐயா, என்னைப்பெற்ற தாயை நான் குறைகூறுவதுண்டு; நீங்கள் குறைசொல்லும்போதுநானும் மெய்தான் என்றுசொன்னதுமுண்டு; ஆனால் என் தாயாரை நானுக, நீங்களாக ஏதுங் குறை கூறிவிட்டால் என் அருமையான அக்காள் மனந் தாங்க மாட்டாள் ஐயா, இது உங்களுக்குத் தெரியுந்தானே; உங்கள் இளைய மருமகன் செய்த படுவஞ்சனைகள், பாரதூரமான பிழைகள், அநியாயங்கள் இவைகளைப் பற்றி நாங்கள் எடுத்துப்பேசி ஆத்திரப்பட்டாலும், "பாவம், அந்த ஆளைக் குற்றஞ் சொல்லாதே தங்கைச்சி, அந்த ஆளின் பொல்லாத ஊழ், எங்கள் துரதிஷ்டம் அவரை அப்படிச் செய்யத் தூண்டிவிட்டது" என்று எனக்குஞ் சமாதானம் சொல்லும் என் தமக்கையார் எங்கள் பெரிய அத்தான் செய்த அற்ப தவறை மனத்துட் கொள்வாரென்றா? ஐயா, நீங்கள் நினைக்கிறீர்கள்; அவர் இங்கே வந்தபோது என் அக்காளை வேண்டாமென்று விட்டுத் தங்கையைக் கல்யாணஞ்செய்ய உடன்பட்டாரே யென்ற ஆத்திரம் என் மனத்தில் இருந்தது ஐயா, என் அக்காளல்லவா எனக்குப் புத்தி சொல்லி என்னைக் கொண்டு விருந்தாக வந்த எங்கள் பெரிய அத்தானை உபசரிப்பித்தவர்; ஆனதால் ஐயா, நீங்கள் அதையிட்டுச் சிறிதும் கவலைப்பட வேண்டாம்; சிந்திக்க வேண்டாம்; முதல் என் அக்காளின் கருமத்தைப் பாருங்கள்" என்று சந்தோஷமாகச் சொல்லி முடித்தாள் சுந்தராம்பிகை; கேட்ட தகப்பனார் அளவற்ற ஆநந்தமடைந்தார். "முதல் என் அக்காளின் கருமத்தைப் பாருங்கள்" என்று தன் இளைய மகள் சொன்னதை யெண்ணி யெண்ணி மகிழ்ச்சியடைந்தார் தகப்பனார்; "கண்ணே, சுந்தரம் உன் அக்காளை இங்கே அழைத்து வர" என்று தகப்பனார் சொல்ல, மகள் உடனே எழுந்து சென்று தன் தமக்கையைக் கூட்டிக்கொண்டு வந்தாள்.

"அப்படித்தான் நினைத்தேன்"

தகப்பனும் மக்களும் பல கதைகளையும் பேசிக்கொண்டு நெடுநேரம் கழித்தனர்; இங்ஙனமாக மாலை நாலரை ஐந்து மணி வரையிலிருக்கும்டக்றர் சுந்தரராசன்வழக்கம்போல அங்கே வந்தார்; தகப்பனரோடு மடத்தின் முற்புறத்திலே பேசிக் கொண்டிருந்த சகோதரிகளிருவரும் டக்றருடைய வரவைக் கண்டவுடனே எழுந்துவிநயமாக ஒதுங்கி நின்றனர்; "எங்கள் ஐயா வந்து விட்டார்; நாற்காலியில் அமருங்கள்" என்று தன் முகத்தில் மகிழ்ச்சி தோன்ற இதமாகச் சொன்னாள் அமிர்தாம்பிகை. "தம்பி, இப்படிஇருங்கள்" என்று சொல்லித் தம் பக்கலிலுள்ள நாற்காலியில் அவரை இருக்கச் செய்தார் முதலியார்; இருக்கும்போதே டக்ரர் "ஐயா, எப்போது வந்தீர்கள்" என்று விநயமாகக் கேட்க, "இன்று காலையிற்றான் வந்தேன்" என்று முதலியார் பதில் சொன்னார்; "இவர்கள் தாம், ஐயா, எங்கள் தங்கைச்சிக்கு வந்த ஆபத்தான நோயை மாற்றியவர்கள்" என்று அமிர்தாம்பிகை சொல்ல, "வரக்கண்டவுடனே அப்படித்தான் நினைத்தேன் மகளே; எல்லாம் திருவருளின் செயல்; எமக்கென்ன தெரியும்" என்றார் முதலியார்; "நீங்கள் சொல்வது நிசம்" என்றார் டக்ரர். இதற்குமுன் டக்ரர் வரவைக் கண்டால் அதிகம் ஒதுங்கி நாணந் தலைக்கொள்ள அரைச் சொல்லுங் கால் சொல்லுமாக அவருடன் வார்த்தையாடும் சகோதரிமார், அன்று தகப்பனும் உடன் இருக்கிறாரென்ற துணிவினாற் போலும் சற்றுச் சுவாதீனமாக நின்று டக்ரர் முன்னிலையிற் பேசினார்கள்.

(வரும்)

பாதிப் பிரேதம்

புங்குடுதீவிலுள்ள ஆறுமுகம்-கணபதிப்பிள்ளை என்பவரின் பிரேதம் ஓர் வயலுக்குள் வைக்கோலால் மூடப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டது. இப்பிரேதத்தின் அரைக்குக் கீழ் உள்ள பாகம் காணப்படவில்லை. இச்சம்பவம் ஊர்காவற்றுறைப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிசார் விசாரணை செய்து வருகிறார்கள். ந-ஆ

தந்திச் சமாசாரம்

இந்திய சைநியங்களின் பொறுப்பு

பர்மாவிலிருந்து ஒரு தாக்குதல் ஏற்படவேண்டி வந்ததால் இந்தியத் துருப்புகள் அதில் பிரதான அங்கம் வகிப்பார்களென்று ஓர் இந்தியப்படை விமர்சகர் கூறினர்.

அவர் மேலுங் கூறியதாவது:- நாங்கள் காவல்படைகளைத் துரிதமாக அனுப்புகிறோம். தாய்லாந்து பர்மா எல்லைப்புறம் வழியாக மார்டபான் குடாவரையில் செல்லும் ஸிலவின் நதியின் திசையிலுள்ள காடுகளில் அடிக்கடி நமது பட்டாளங்கள் சென்று மறைகின்றன. காடுகளின் வழியாகக் காவல் படைகள் செல்லுகின்றன. அவைகளின் பலத்தை நேரிற் கண்டால்தான் நம்பமுடியும்; பலநாட்களுக்கும் சில சமயங்களில் பல வாரங்களுக்கும்பிறகு மிக முக்கியமான தகவல்கள் அவைகொண்டு வருகின்றன.

பிரஸ்தாபத் துருப்புகள் சீக்கிரமாக ஒன்று சேருவதிலும் சீக்கிரமாக மறைவதிலும் காட்டிவரும் திறமையைப்பற்றி அவர் தமது சொந்த அநுபவத்தை விவரித்துக் காவல் துருப்புகளை மிகவும் சிலாகித்துப் பேசினர்.

பர்மாவுக்கு மேல் 7 யப்பானிய விமானங்கள் நாசம்

ரங்கூனிலிருந்து கேற்றுக்கிடைத்த செய்தி கூறுவதாவது:-

பர்மாவில் சத்துரு ஆக்கிரமித்துள்ள பிரதேசத்தில் நேற்று மூன்று அமெரிக்க விமானங்கள் வெற்றிகரமாகத் தாக்கியதில்தான் ஏழு யப்பானிய விமானங்கள் நாசம்செய்யப்பட்டதாகத் தலைமைக் காரியாலயத்திலிருந்து கிடைத்த மற்றோர் செய்தியிலிருந்து தெரியவருகிறது. பிரஸ்தாப மூன்று விமானங்களுக்கும் யாதொரு சேதமும் ஏற்படவில்லை.

இன்று அதிகாலையில் நல்லநிலா வெளிச்சத்தில் சத்துருவிமானங்கள் இரண்டாம் முறையாக ரங்கூனைத் தாக்கின. தூரத்தில் வெடிகுண்டுகள் வெடிக்கும் சப்தம் கேட்டது. இப்பொழுது விபரமாக எதுவும் தெரியவில்லை.

மலாயாவின் மேற்குக் கரையில் சத்துருப் படை

மலாயாவின் மேற்குக்கரையோரத்தில் பேரா. பேர்னும் நதிகளின் முகத்துவாரத்தில் ஜப்பானியர்கள் வந்திறங்கியிருப்பதாக இலண்டனில் அதிகார தோரணையில் கூறப்படுகிறது. இவ்வாறு இறங்கியிருக்கும் துருப்புகள் மிகப்பெரியதென்று கருதப்படுகிறது. ஆனால் பிரிட்டிஷ் இடதுசாரித் துருப்புகள் இனனும் பலமுறுத்தப்பட்டு வருகின்றன.

பிலிப்பைனில் சத்துரு விமானத் தாக்குதல்

ஓலொங்க போத்ராணுவ துறைமுகத்திலும் மணிலாக் குடாவின் வாயிலிலுள்ள திவுங்கோட்டையான கார்ரிஜிடாரிலும் மாலோலோஸிலுள்ள விமான நிலையத்திலும் ஜனவரி மாதம் 1-ம் திகதியிலிருந்து அடிக்கடி ஜப்பானியக் கடற்படை விமானங்கள் தாக்கிக் கொண்டிருப்பதாக இன்று பிற்பகலில் வெளியான ஜப்பானிய கடற்படை அறிக்கையொன்று கூறுகிறது.

ருஷ்யப் போர்முனையில் இரவு முழுவதும் சண்டை

ஜனவரி மாதம் 4-ம் தேதி இரவில் எல்லா அரங்கங்களிலும் ருஷ்யத் துருப்புகள் சத்துருவைத் தாக்கியதாகச் சோவியத் நண்பகல் அறிக்கையொன்று கூறுகிறது.

ருஷ்யப் போர்முனை மத்தியப்பகுதியில் ஏற்பட்ட பல தாக்குதல்களைத் தாங்கள் திரும்ப விரட்டியடித்துவிட்டதாக ஜெர்மன் அறிக்கையொன்று கூறுகிறது. வட ஆப்பிரிக்காவில் பிரதானமான சண்டையெதுவும் நடக்கவில்லையென்று மேலும் அச்செய்தி கூறுகிறது.

லிபியாவில் பிரிட்டிஷ் விமானங்கள் முயற்சி

ஹா-யாவிலுள்ள அச்சுநாட்டுப் படைகளைப் பிரிட்டிஷ் விமானங்கள் மிகவும் கடுமையாகத் தொடர்ந்து தாக்கினவென்று கெய்ரோ அறிக்கையொன்று கூறுகிறது.

சிலாங்கூரில் யப்பானியர் யுத்தமுயற்சி

6-1-42

மலாய்நாட்டில் குவாலாசிலாங்கூர்ப்பகுதியில் யப்பானியர் பிருத்தானிய சைநியத்தைப் பிருக்பக்கமாகப் பின்னிடச் செய்தற்கு முயலுகின்றார்களாம்.

யப்பானிய கப்பல்மீது நேரில் தாக்கியது

அமெரிக்கபடை மிண்டானோத் தீவிற்குச் சமீபமாகவுள்ள கடலில் ஒரு ஜப்பானிய யுத்தக்கப்பலைத் தாக்கிடாவோ என்னுமிடத்திற் கப்பால் ஒரு யப்பானிய டிஸ்ரோயர்க் கப்பலைக் கடலுள் அமிழ்த்தி விட்டனவாம்.

மலாய் நாட்டிற்கு மேலாகப் பறந்த பகைவருக்குரிய 2 விமானங்கள் சிதைக்கப்பட்டன வென்றும் குவாய்ப்பகுதியிலும் ஒரு விமானம் அழிக்கப்பட்டதென்றும் சொல்லப்படுகின்றது.

இரங்கூனிற் பகைவரின் ஆகாயப்படை

இரங்கூன் பட்டினத்தில் யப்பானியர் ஆகாயப்படை இரண்டாம் முறையும் வந்து தாக்கினதாம்; மிகவுந் தூரத்தில் வெடிச்சத்தம் கேட்டதென்றும், ஆனால் விபரம் தெரியவில்லை யென்றுஞ் சொல்லப்படுகின்றது. இந்திய சைநியம் பர்மிய சைநியம் சீன சைநியம் ஆகிய மூன்றுஞ் சேர்ந்து பர்மிய எல்லைப்புறத்தை நன்கு அரண்செய்து விட்டனவாம்; இரங்கூனிலே பகைவருக்குரிய ஆகாயப்படை 60 வரையில் அழிக்கப்பட்டன வெனச் சொல்லப்படுகின்றது.

பினங்கின் நிலைமை

பினங்கிலேயுள்ள சனங்கள் அங்கிருந்து வெளியே போய்விட்டாரென்று முந்திவந்த சமாசாரம் உண்மையல்ல வென்றும் அங்கிருந்த சனங்கள் இப்பொழுதும அங்கேதான் இருக்கிறார்களெனவும் அங்குள்ள இந்திய சனங்கள் விஷயமும் அப்படித்தானென்றும், பினங்கிலே யப்பானியர் கைப்பற்றிய பாகத்திலுள்ள ஆசியாக்கண்டத்துச் சனங்களை பிரானவியர் அகாட்டுச்சாதி முறையை அநுசரித்தே நடத்துகிறார்களென்றும் பிந்திய சமாசாரங்களைக் கொண்டு அறியக் கிடக்கின்றதாம்; மேலும் அங்குள்ள சனங்களுக்கு மூன்றுமாசகாலத்திற்காகிய உணவுப் பொருள் முந்தியே அங்கு உண்டாம்.

மலாய்நாட்டில் பிருத்தானியப் படை

பகைவரைத் தாக்குகின்றது

கோல சிலாங்கூரிலுள்ள ஜப்பானியப்படையைத் தாக்கிப் பின்னிடச் செய்வதற்குப் பிருத்தானிய படை முற்பட்டுச் செல்கின்றது.

றங்கூனில் யப்பானிய ஆகாயப்படை அக்கிரமம்

றங்கூனிலுள்ள பௌத்த பள்ளிகளிலும் வைத்தியசாலைகளிலும் இல்லங்களிலும் யப்பானிய ஆகாயப்படைகள் காரணமின்றிக் குண்டுகளைப் பெய்து ஊரவர்கட்கும் உயிர்ச்சேதம்செய்தனவாம்.

குவென்ரன் ஆகாயப் படைத் தளம்

பகைவர்கைப்பட்டது

குவென்ரனிலுள்ள ஆகாயப் படைத்தளம் பகைவர்கைப்பட்டது பிரிக்கினின்றும் பிருத்தானிய படை பின்வாங்க நேர்ந்தது. சிங்கப் பூரிற் பகைவர் ஆகாயப்படை வெடிகுண்டு பெய்தமையினால் ஊரவருக்கு மாத்திரம் அற்பசேதம் நேர்ந்ததாம். ஊரவர்களுள் ஒருவர் மாண்டதாகச் சொல்லப்படுகின்றது.

இலங்கையில் இந்திய சைநியம்

இலங்கையிலுள்ள படைக்குத் துணையாக இந்திய படை இப்பொழுது கொழும்பில்வந்து சேர்ந்திருக்கின்றது; இப்படைக்குத் தலைவர் "பிரிக்கேடியர்" C. W. பவின் என்பவராம். இவருடைய ஸ்தானம் கொழும்பிற்றுனும். கொழும்புப்பட்டினத்திலும் அயலூர்களிலுமுள்ள சனங்கள் இப்போர்வீரர்களைக் கூட்டங் கூட்டமாக வந்து பார்த்துச் செல்கின்றார்கள். இப்பட்டினத்தில் இந்திய சீக்கியர், கூர்க்கர், வங்காளிகள், பாஞ்சாலத்தினர்களும் காணப்படுகின்றனராம்.

முற்றவெளியில் பொதுசனக் கூட்டம்

பல தீர்மானங்கள் நிறைவேறின

யாழ்ப்பாணம் பட்டின வரியிறுப்போர் சங்க ஆதரவின்கீழ் 1942-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ந் திகதி புதன்கிழமை சாயந்தரம் 4½ மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஒரு பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. அப்போது மூடிக்குரிய நியாயதுரந்தரர் மிஸ்டர் A. V. குலசிங்கம் தலைமைவகித்தார்.

உதவி மாகாணத்தலைவர் மிஸ்டர். C. T. ஓலோவ் உணவுப்பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து வருவது தண்டிக்கப்படக் கூடுமென்பதுமுன் விட்டு நாம் என்னென்ன செய்யவேண்டுமென்று புத்திமதிகள் கூறினர். அவர் மேலும் சொல்லியதாவது:-

"மலாயாவில் நடக்கும் சண்டை இலங்கையில் ஏனைய பாகங்களிலுள்ள சனங்களைவிட வடமாகாணச் சனங்களை அதிகம் மனச்சங்கடத்திற்கு இடமுண்டாக்கி விட்டது. ஏனென்றால், மலாயாவிலுள்ள இலங்கையர்களில் வடமாகாண வாசிகளே பெரும்பகுதியினர். ஆனால் அவர்களுக்கு வேண்டிய நிவாரண வேலைகளைச் சரிவரச் செய்யும் வண்ணம் எங்கள் தேசாதிபதி மலாயா அரசாங்கத்துடன் வேண்டும் ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகிறார்.

ஆகவே யுத்த நெருக்கடி காரணமாக எங்கள் ஊரிற் செய்யப்பட வேண்டிய காரியங்களைக் கவனிப்போம். எங்கள் ஊரில் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த கேந்திரஸ்தானங்கள் ஒன்றுமில்லாததால் விமானத் தாக்குதல் அதிகம் ஏற்படக் கூடுமென்று எண்ணுவதற்கிடமில்லை. எனினும் விமானத் தாக்குதல்களைச் சமாளிக்க ஓர் உத்தியோகஸ்தர் நியமனஞ் செய்யப்பட்டிருக்கின்றார். அந்த உத்தியோகஸ்தரான மிஸ்டர் O. E. குணதிலக்கா இம்மாதம் 11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை உங்கள் ஊர்க் கச்சேரிக்கு விஜயஞ் செய்து அங்குள்ள உத்தியோகஸ்தர்களுடன் விமான எதிர்ப்பு விஷயமாகக் கலந்து ஆலோசிப்பார். அவர் சொல்லும் முடிவுகளைப் பொதுசனங்களுக்கு நாங்கள் அறிவிப்போம். அதைவிட முக்கியமான உணவுப் பொருள்கள் எங்களுடைய சொந்த முயற்சிகளினாலேயே சமாளிக்கப்பட வேண்டியது. உண்மையில் கடற்படைத் தளம் எங்கள் கையில் இருக்கும்வரை வெளிநாடுகளிலிருந்து வரும் உணவுப் பொருள்கள் குறைவில்லாது வந்துகொண்டிருக்கும். ஆனால் எதிர்பாராத விதமாகச் சிங்கப்பூர் சத்துருவின் கையிற் போகுமானால் உணவுப் பொருள்களில் சேதமுண்டாகிவிடும். அந்நிலை வருமுன் இலங்கையிற் கமச் செய்கைக்குத் தோதான நிலங்கள் அனைத்தையும் உணவுப் பொருள் உண்டாகும் நிலங்களாக மாற்றவேண்டியது உங்கள் கடன். அவ்வாறு செய்யப்பட வேண்டுவதற்குத் தேவையான உதவிகளை அரசாங்கத்தார் இலவசமாகச் செய்து கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்கள். நீங்கள் ஆதாரமற்ற வதந்திகளை நம்பி அச்சமடையாமல் உணவுப் பொருள் உற்பத்தி செய்யும் விஷயத்தில் அரசாங்கத்தோடு ஒத்துழைக்குமாறு உங்களை நான் வேண்டிக் கொள்கின்றேன். ஆதாரமற்ற வதந்திகளைக் கிளப்புவோர்களும் அவைகட்குச் செவி சாய்ப்பவர்களும் அவைகளைப் பரப்புவோர்களும், தாங்கள் தேசத்துரோகிகளாக வேண்டுமென்ற எண்ணமில்லாமலே ஐந்தாவது அணிவகுப்புப் படையாளராகின்றனர். யாழ்ப்பாணத்தில் அவ்வாறானவர்கள் இருப்பார்களென்று நான் எண்ணவில்லை. எனினும் அதைப் பற்றி எச்சரிக்கிறேன். பேசி முடித்ததும் உதவி மாகாணத் தலைவர் கூட்டத்தினின்றும் சென்று விட்டார். பின்னர் எதிர்பாராத விதமாகக் கூட்டத்தில் அதிக பரபரப்புக் காணப்பட்டது. காரணம் என்னவென்று விசாரித்ததில் யாழ்ப்பாணத்தில் சாய்ப்புச்சட்டம் வேண்டாமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்ற இருப்பதை அறிந்து சாய்ப்புச்சிப்பந்திகள் பலர் அதனைத் தடுப்பதற்காக அங்கு கூடியிருந்தார்கள். உதவிமாகாணத் தலைவர் பேசிமுடித்தபின்னர் திரு. G. G. பொன்னம்பலத்தைப் பேசும்படி கேட்டார். திரு. வ. கந்தையா தான் பேசவேண்டுமென்று அக்கிராசனரிடம் அநுமதி கேட்டார். அநுமதி கொடுபடவே அவர் சென்ற 6 அல்லது 7 மாதங்களாக மிஸ்டர். G. G. பொன்னம்பலம் யாழ்ப்பாணம் வராததையும் சென்ற சில வாரங்களாக உணவுப்பொருள் விலையைப்பற்றி இங்கே சேர்ந்த குழப்பத்தின்போது மிஸ்டர். G. G. பொன்னம்பலம் இங்குவந்து வேண்டுவன செய்யாது விட்டதைப் பற்றியும் உணவுப்பொருள்கள் உயர்ந்த விலைக்கு விற்க எத்தனித்தவர்களைக் காப்பாற்றவே யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்தாரென்றும் அத்வக்காத்து என்ற தன்மையில் அவர் எந்த வழக்குக்கும் ஏற்படலாமென்றும் ஆனால் தமிழ்மக்களின் நம்பிக்கைக்கும் விசுவாசத்துக்குமுரிய தலைவர் என்ற தன்மையில் ஏற்படக்கூடாதென்றும் குறிப்பிட்டார். இதனையின் கூட்டங் குலைய ஆரம்பித்தது. அக்கிராசனர் மிகவினயமாகவும் சாதுரியமாகவுஞ் சனங்களை வேண்டிக்கொண்டதின் பேரில் மறுபடியுங் கூட்டம் தொடர்ந்து நடந்தது.

மிஸ்டர். G. G. பொன்னம்பலம் கூறியதாவது:- யுத்தநெருக்கடியை முன்னிட்டு உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படலாமென்று முன்னதாகவே அறிந்து தான் செய்தவைகளையும் மலாயா யுத்தந் தொடங்கியதற்கு அப்பால் அங்குள்ள இலங்கையரின் நன்மைக்காகத் தாம்செய்தவைகளையும் குறிப்பிட்டார். பின்னர் மிஸ்டர். A. மகாதேவாவும் வேறு பலரும் பேசினர்.

பின்வரும் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன:-

1. வடமாகாணக் கடற்கரை யோரங்களில் தேவையான காவல் விமானம் போர் விமானங்களை நிறுவுதல். விமான அபாய அறிவிப்புக் கொடுக்கும் கருவிகளைத் தேவையான இடங்களில் அமைத்தல்.

வெடிகுண்டுகள், எரிகுண்டுகள், விழுங்கால் தப்பித்துக் கொள்ளுவதற்கு என்ன வழிவகைகளைக் கையாள வேண்டுமென்பதைப் பொதுசனங்களுக்குக் கற்பித்தல்,

தேவையேற்படின், அபாயம் நெருங்கிய இடங்களிலிருந்து பிற இடங்களுக்குப் பிரதானமாகப் பெண்களையும் குழந்தைகளையுங் கொண்டு செல்வதற்கு வேண்டிய ஒழுங்கு செய்தல்.

விமானத்தாக்குதல் ஏற்பட்டால், சனங்கள் ஒதுங்கி நிற்கக் கூடிய ஒழுங்கை முன்மாதிரியாக வகுத்தமைத்தல்,

எதிரிகளின் தாக்குதலினால் பொதுசனங்களின் சாதாரண வாழ்க்கை சீர்குலைந்து போகுமானால் அச்சமயங்களில் அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கொடுப்பதற்குச் சகல ஒழுங்குஞ் செய்து வைத்தல் ஆகிய இவற்றைச் செய்யவேண்டுமென்று இக்கூட்டம் அரசினரைக் கேட்டுக் கொள்கின்றது.

2. மலாய்நாட்டிலும் தொடுவாய்ப் பகுதியிலும் யப்பானியரின் தாக்குதலினால் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாகப் பலவித சொல்லொணாத் துயரங்களையும் அநுபவிக்கும் நமது சகோதரராகிய மலாய் நாட்டில் வசிக்கும் இலங்கை மக்களுக்கு யாழ்ப்பாண மக்கள் சார்பாக இக்கூட்டம் தமது பெருந் துயரத்தையும் அநுதாபத்தையும் தெரிவிக்கின்றது. மேலும் அவ்விதம் கஷ்டப்படும் எமது மக்களுக்குக் கஷ்ட நிவாரணத்தின் பொருட்டுப் பண உதவி செய்யுமாறு இலங்கை அரசினரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கின்றது.

மேலும் அரசினரால் செய்யக் கூடிய பண உதவியுடன் சேர்த்துக் கொடுப்பதற்காக யாழ்ப்பாண மக்களிடமிருந்து பணஞ் சேகரிப்பதற்கு ஒரு தகுதியுள்ள கொமிற்றியை நியமித்து வேண்டுவனவற்றைச் செய்ய வேண்டுமென்று இக் கூட்டம் வடமாகாணத் தலைவரை வேண்டிக் கொள்கின்றது.

3. அரசாங்கத்தாரால் ஒவ்வொரு பகுதியிலும் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குக் கூடிய முயற்சியும் பண உதவியுஞ் செய்ய வேண்டுமென்று இம் மகாசனம் கேட்கின்றது.

4. பர்மாவிலிருந்து இனிமேல் அதிக அரிசி வரக்கூடுமெனக் காத்திருக்கக் கூடாமையினால் இந்தியாவிலிருந்து கூடிய அரிசியைத் தங்கள் இஷ்டப்படி தருவிக்க வியாபாரிகளுக்கு அரசினர் வேண்டிய உதவி செய்ய வேண்டுமென்றும், அல்லாவிட்டால், அரிசி தட்டுப்பாடாவண்ணம் கூடிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இம்மகாசபை வேண்டுகிறது.

5. தற்சமயம் பெற்றோல் பஞ்சம் இருப்பதால், சயிக்கிளில் ஒருவருக்குமேல் சவாரி செய்யப்படாது என்னும் சட்டத்தை இந்நெருக்கடி முடியும் வரையும் கையாளாமல், பின்போட்டு வைக்கும்படி அதிகாரிகளையும் பட்டின சங்கத்தையும் இம்மகாசபை கேட்டுக் கொள்கின்றது.

6. தற்கால யுத்த நெருக்கடியையும் அரிசிப் பஞ்சத்தையும் உத்தேசித்து யாழ்ப்பாணத்தில் அநேக ஏழைமக்கள் அன்றன்று சீவியஞ் செய்ய வேண்டியவர்களாயிருப்பதாலும் இச்சட்டம் சனங்களைப் பாதிக்கும் என்பதால் கனம் தொழில் மந்திரியாரை இச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வராமல் இருக்கும்படி இம்மகாசபை வேண்டிக் கொள்கின்றது.

அதனோடு சிப்பந்திகட்கு ஒரு சட்டம் இயற்றினால், அதேபோதுமானதென்றும் இதுபோது சனங்களைப் பாதிக்காதென்றும், தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றது. இப்பிரேரணை அங்கீகாரம் பெறவில்லை. கூட்டம் முடிவடைந்தது.

ஊ-நி

இந்தியா-இலங்கை சம்பாஷணை

கல்கத்தா, ஜன, 3—

கல்கத்தா இந்திய வர்த்தகர் சங்க நிருவாகசபை அங்கத்தவர்கள், இன்றுமாலை இந்திய அரசாங்க கடல் கடந்த இந்தியர் பகுதி அங்கத்தவர் ஸ்ரீ. எம். எஸ். ஆனேயை மேற்படி சங்க மண்டபத்திற் கண்டு பேசினார்கள்.

இந்தியா-பர்மா குடியேற்ற ஒப்பந்தம், இந்தியா-இலங்கைச் சம்பாஷணைகள் வடனில் வாழும் இந்தியர்கள் சம்பந்தமாக விதிக்கப்பட்டுள்ள தடைகள், யுத்தநிலைப் பொறுத்தவரையில் மலாயா, பர்மா ஆகிய தேசங்களில் வாழும் இந்தியர் பற்றிய நிலைமை ஆகிய விஷயங்களைப் பற்றிக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தூரக்கிழக்கு யுத்தத்தின் காரணமாகப் பர்மா, மலாயா, ஆகிய தேசங்களில் வசிக்கும் ஏராளமான இந்தியர்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமென நிர்வாகசபை எடுத்துக் காட்டியது.

மேற்கூறிய தேசங்களிலுள்ள இந்தியர்களைக் காப்பாற்றப் போதிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியமெனவும், குறித்த இந்தியர்களுக்காவது அல்லது அவர்களின் சொத்துக்களுக்காவது தீங்கு நேரிட்டால் அதைப்பற்றிய நம்பத் தகுந்த தகவல்கள் இந்தியாவுக்குக் கூடிய சீக்கிரம் கிடைக்கும்படி செய்யப்பட வேண்டுமெனவும் நிர்வாகசபை வற்புறுத்தியது.

நிர்வாகசபையின் அபிப்பிராயங்களை ஸ்ரீ ஆனே மிக்க அநுதாபத்தோடு கேட்டு அதற்குத் தகுந்தபடி பதில் அளித்தார்.

கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக அரிசி விற்றாராம்

வண்ணார்பண்ணை, தட்டாதெருவில் வியாபாரம் செய்யும் பொன்னம்பலம்-சுப்பையா என்பவர் ஒரு கொத்து அரிசியை, கட்டுப்பாட்டு விலையிலும் கூடுதலாக விற்றதாக குற்றஞ்சாட்டிய வழக்கு நீதிபதி மிஸ்டர் குவிண்டன் பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின்போது கூறப்பட்டதாவது:-

1566-ம் இலக்கச் சார்ஜன் ரத்தினமும் 325-ம் இலக்கப் பொலிஸ் முத்தையாவும் தட்டாதெருவாசிபோனவர்களுக்கு நாகர்-இளையகுட்டி ஒரு முறைப்பாட்டைச் சொன்னார். அதில், குறித்த சுப்பையாவென்பவர் கட்டுப்பாட்டு விலைக்கும் கூடுதலாக விற்றதாகக் கூறினர்; அப்போது சார்ஜன் தம்மிடமுள்ள சில நாணயங்களில் பலவற்றைக் குறித்து அடையாள முண்டாக்கி அந்த நாணயங்களை இளையகுட்டியிடம் கொடுத்து கடையில் அரிசி வாங்குமபடி கூறியதாயும், அப்படியே இளையகுட்டி செய்ததாயும் பின்னர்ச் சார்ஜன் கடையைச் சோதித்து அக்குறித்த நாணயங்களையும் எடுத்துக் கொண்டு எதிரியையும் பிடித்துச் சென்றதாகவும் கூறப்பட்டது.

இன்று எதிரிமீது வழக்குத் தொடரப்பட்டது. சார்ஜனும் இளையகுட்டியும் சாக்ஷியம் கூறினர்.

எதிரிமீது குற்றஞ்சாட்டப்பட்ட போது எதிரி தாம் குற்றவாளியல்ல வெனக் கூறினர். நீதிபதி எதிரியை 400 ரூபாய் பிணையில் விட்டு வழக்கை மேல் விசாரணைக்காக வருகிற 10ந் திகதிக்குத் தவணையிட்டார்.

கடிதம்

எய்தவனிருக்க அம்பை நோவதேன்

இந்துசாதனப் பத்திராசிரியர் அவர்களுக்கு:-

ஐயா!

இறந்தோரை இகழ்ந்து அதிலும் பத்திரிகை மூலமாகக் கூறிவருவதனைவிட இழிந்தசெயல் வேறொன்றில்லையென்பதை வண்ணை ஸ்ரீ. K. வைத்தியேசுரஐயர் அவர்கள் உட்பட தமிழுலகம் ஒத்துக்கொள்ளும் என்பதற்கையமில்லை. சென்ற சில வாரங்களாக டாக்டர். உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் ஆனந்தவிகடன் பத்திரிகையில் உள்ளவைத விடுத்து இல்லாதவைப் புகுத்தி ஈழச்சிங்கங்கள் இரண்டினை இழித்துக் கூறிவருகின்றார். அதனை அவ்வளவோடு விட்டுவிடின் வருங்கால ஆராய்ச்சி உலகம் குதிச்சிபுக்க மான்போல வெருட்சியுற்றிடப்படி நேருமாதலால் அதனைக்கண்டிப்பதே முறையாகும். சாதி, சமயம், சமூகம் என்பனபோன்ற பழுத்தவைதீகக்கொள்கைகளாதலை மேற்கொண்டுலவும் ஸ்ரீ வைத்தியேசுர ஐயர் அவர்களைப் போன்ற பெருமக்களே இதனை முதற் கண்டிக்கவேண்டியவர்களாயிருக்கும் மௌனமாகவிருந்தனர். ஈழநாட்டிற் பிறந்தும் தாய்நாட்டுச் சகோதரப் பற்றின்மையன்றோ? ஆகவே, இந்துசாதனத்திலும் இந்துகேசரியிலும் வேறுபலர் கண்டித்து வருகிறார்கள்.

பொதுவாக ஒருவரது கற்றறிவைப் புகழும்போதோ அன்றி அவரது நிறகுணத்தை இகழும்போதோ "குலத்தளவேயாகும் குணம்" என்று கூறுவது இயற்கை. ஆகவே டாக்டர், உ. வே. சாமிநாதஐயர் அவர்களைக் கண்டித்த நண்பர் "அ. வி. ம." மேற்கூறிய முதுமொழியை எடுத்தாள நேர்ந்தது. ஆசிரியர் டாக்டர் சாமிநாதஐயர் அவர்களை மாத்திரம் குறிக்காது அவரை உள்ளிட்ட பிராமணச் சமூகம் முழுவதையுமே நிந்திக்கிறதெனத் தாய்நாட்டுச் சகோதரப் பற்றற்று மௌனமாயிருந்த வண்ணை ஸ்ரீ. K. வைத்தியேசுரஐயர் அவர்கள் இப்போ சமூகப்பற்றால் பொறுமையை இழந்து சலம்பக உறப்பைக் கொண்டு ஆட்சேபிக்கிறார். இந்தப் பணிகாரம் வேண்டாம் சலசலப்பு இருந்தாற்போதும் என்றமாதிரியல்லவா இருக்கிறது. வேறுனர்கள் சாதியத்தார்மீதும் மேற்கூறிய முதுமொழியை எடுத்தாண்டால் அவ்வசாதியத்தாருக்குப் ஸ்ரீ வைத்தியேசுரஐயர் அவர்கள் ஆட்சேபிப்பதுபோல் முழுச் சாதியத்தாரையுங் குறிக்குமென ஆட்சேபிக்க இடமுண்டோ இல்லையோ? அப்படியாயின் மேற்கூறிய முதுமொழியை எடுத்தாள்வதெங்ஙனம்? இதனை வைத்தியேசுரஐயர் அவர்கள்தான் தெரியப்படுத்தவேண்டும்.

சாதிக்கட்டுப்பாட்டை நன்கு ஆராய்ந்த காலஞ் சென்றசைமன் காசிச்செட்டியவர்கள் பிராமணருள்ளும், வடமர், சோழிவடமர், வடக்கசவடமர், சோழதேசவடமர், முதலிய இருபத்துநான்கு கோத்திரமுளவெனக் கூறியிருக்கிறார். இவ்விருபத்துநான்கு கோத்திரங்களும் ஒரேபடியிலுள்ளன வல்லவென்பதும் ஒன்றற்கொன்று குறைவென்பதையும் ஸ்ரீ வைத்தியேசுரஐயர் அவர்களும் ஒத்துக்கொள்வர். ஆகவே இறந்தோரை இகழ்ந்துகூறும் ஐயர் இவ்விருபத்துநான்கினுள்ளும் மிகவும் குறைந்த கோத்திரங்கள் ஒன்றினுள் உதித்தவராயிருக்க வேண்டுமெனக் கடிதர் கருதுகிறாரென இலகுவான கருத்தைக்கொள்ளாது பிராமணகுலம் முழுவதையுமே நிந்திக்கும் என்ற கருத்தைக்கொண்ட ஸ்ரீ வைத்தியேசுரஐயர் அவர்களின் மனோதத்துவ ஆச்சரியமே. அன்றியும் நூலாசிரியர் காலத்தில் வழியவரிக்கருசிப் பூணூல்தரித்த நாவிதர் மறையோரைப்பற்றி அக்காலத்துச் சரித்திராசிரியர்கள் எழுதியிருப்பதையும் கிளறிவிட்டவேண்டுமோ?

"காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணதே"

பொய்படுமொன்றோ புனைபூணும் கையறியாப் பேதை வினைமேற் கொளின்.

மு. அ

அபராதம் விதிக்கப்பெற்ற கடைக்காரர்

6-1-42

யாழ்ப்பாணம் நீதிஸ்தலத்தில் இழ்க்காணப் பட்டோர் அரசாங்கத்தார் அங்கீகாரஞ் செய்யாத நிறுவைக்குரிய படிகளை வைத்து நிறுத்து வியாபாரஞ் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டனர்.

M. M. சுலைமான்லெப்பை காவல்துறை ரூபா 5-00, A. முத்தையா காவல்துறை ரூபா 15-00, P. இராசலிங்கம் ரூபா 25-00, N இராசரத்தினம் ரூபா 20-00, M. M மரக்காயர் சோனகதெரு ரூபா 5-00, M. துரை சோனகதெரு ரூபா 5, M. கந்தையா கந்தரோடை ரூபா 30.

விலைக்கட்டுப்பாட்டுப் பிரமாண அட்டவணையைக் கடையில் தொங்கவிடாததற்கு அபராதம் விதிக்கப்பட்டோர்:-

N. M. L. செயது முகம்மது, காவல்துறை ரூபா 25, A.M. முத்தையா காவல்துறை ரூபா 25, P. கோவிந்தசாமி கோப்பாய் ரூபா 15, V. தம்பு ஆனைக்கோட்டை ரூபா 15, நிறையில் குறைவான படி வைத்திருந்ததற்காக அபராதம் விதிக்கப்பட்டவர், K. சோமசுந்தரம் பெரிய கடை ரூபா 30.

பழப்பாணி செய்யும் பொதுவான முறை

பாணி செய்யத் தெரியும் பழம் கனிந்ததாக இருக்கல் வேண்டும். ஆனால் அதிகம் கனிந்தபழம் உதவாது. அரைப் பழுத்த நிலைமையில் ஏராளமான பெக்டினும் புளிப்புத்தன்மையும் உண்டு. இன்னக் கூடிய பழத்தின் பருதியை நிறைத்து ஓர் அலுமினிய பாத்திரத்தில் அல்லது தகரப்பூச்சுள்ள ஓர் செயப்பாத்திரத்தில் போடவேண்டும். பழம் மூடத்தக்கதாகத் தண்ணீர் விட்டுப் பாத்திரத்தைக்காய்ச்சிப் பழம் பிருதுவாய்வரும்வரை அவிக்கவேண்டும். மாஅகப்பையினால் பழம் கடையப்படவேண்டும். பழம் புளிப்புத்தன்மை குறைவாயிருப்பின் அவிக்கும் முன்னமே சித்திரிக் அல்லது சாட்டரிக் திராவகத்தை அல்லது எலுமிச்சம்சாற்றைச் சேர்க்கவேண்டும். வேண்டிய புளிப்புத்தன்மை (திராவகம்) ருசி பார்ப்பதினால் தீர்த்துக்கொள்ளலாம். எது விதத்திலும் புளிப்புத்தன்மை சேர்ப்பது புதியன செயலல்ல. புளிப்புத்தன்மை பழத்திலிருப்பது பழத்தில் உள்ள சலவிலிருந்து பெக்ரின் எடுக்கும்படி உதவும், இனி எவ்வளவு நேரம் பழத்தைச் (அவிக்க) சமைக்கவேண்டுமென்பது பழத்தின் தன்மையில் தங்கியிருக்கிறது. மேலதிகமான நேரத்திற்கு அவியவிடுதல் பெக்ரினைக் கரையப்பண்ணி கரைந்த காரணத்தினால் அது பாகுஆகும். இயற்கையைக்குறைத்துத் தடுத்து விடுகிறது. ஒரு சிறிய அளவு பழச்சசையை எடுத்து பெக்ரின் பரிசோதனை செய்யப்படவேண்டும். அதன் பின் மீதியாயுள்ள பழச்சதைக்கு தேவையான சீனியைச் சேர்க்க வேண்டும். பழக் கலவையிலுள்ள சீனி கரையும்படி முறுகுபாணியாகாமல் கரைக்கப்படவேண்டும். அதன் பின் கூடிய அளவு பலத்த நெருப்பில் பாத்திரம் காய்ச்சப்பட வேண்டும். அதன்பின் உள்ள கலவை கல்லாய் அவிக்கப்பட்டு இடைவிடாமல்கலக்கப்பட்டும் இருக்கவேண்டும். பாணி அதிகமாய் நுரைத்தால் ஏதாவது சாப்பிடும் எண்ணெயில் ஒருஅரைக்கரண்டி நுரையை குறைக்கும்படி சேர்க்கவேண்டும். தண்ணீர் பெரும்பாலும் வற்றும்பொழுது பாணி இறுகத் தொடங்குகிறது. அகப்பையைப் பாணியிலிட்டு மேலே எடுக்கும்பொழுது படலம் படலமாகப் பாணிகாணலாம். இப்படியான நிலையில் கொஞ்சம் பாணியைக் குளிர்ந்த தண்ணீரிற் போட்டால் அது கரையாமலிருக்கும். பாத்திரம் நெருப்பிலிருந்து எடுக்கப்பட்டு பாணியின் மேலுள்ளது எடுபட்டுச் சூடாயிருக்கும்பொழுதே சூடுகாட்டப்பட்டுள்ள போத்தல்களில் போடவேண்டும். அதிகம் சூடுள்ள பாணியைக் குளிர்ந்த போத்தல்களில் விட்டால் உடையாமல் இருக்கும்பொருட்டே போத்தல்கள் சூடாக்கப்பட்டிருக்க வேண்டியதவசியம். பாணி குளிரும்பொழுதே சுருங்கினிக்கதனால் போத்தலின் விளிம்புவரைக்கும் முன்னமே போடப்பட்டிருக்க வேண்டும். பாணி சூடாயிருக்கும்போதே மெழுகுக் கடதாசி வட்டமாகச்செய்து விளிம்பின் மேலே போடவேண்டும். அதனையினால் ஒருஉலோகமூடி காற்று உட்செல்லாமல் போத்தலுக்குப் போடவேண்டும். கொஞ்ச நிமிஷங்களாக போத்தல்கள் தலைகீழாக வைக்கப்படவேண்டும். இந்த வட்ட மெழுகுக்கடதாசி நோய்க் கிருமிகளை அகற்றவும் லோகத்தினால் செய்யப்பட்ட மூடியில் பழம் படாமல் இருப்பதற்குமாகவே போடப்படுகிறது. சிலவாரங்களுக்குள்ளே உபயோகிக்க அளவுள்ள பாணி உள்ள போத்தல்களுக்குக் காற்றுச்செல்லாத லோகமூடிகள் அவசியமில்லை. துப்பரவான கடதாசியினால் மூடிக் கட்டினாற் போதும். பாணியுள்ள போத்தல்கள் குளிரவிட்டு ஓர் குளிர்ந்த காய்ந்த இடத்தில் வைக்கப்படவேண்டும்.

கமத்தொழில் இலாகா

"மலாயாவைப் போல இலங்கைக்குப்பயமில்லை"

"ஏனெனில் தொடர்பாகவிமானத்தாக்குதல் நடத்தசமீபத்தில்விமானத்தளங்கள்இல்லை"

தேசாதிபதியின் றேடியோப் பிரசங்கம்

மலாயா, பர்மா ஆகிய நாடுகளைப் போல இலங்கையிலும் தொடர்பாக விமானத் தாக்குதல் நடைபெறுமென்று அஞ்ச வேண்டியதில்லை. அப்படித் தாக்குவதற்குச் சத்துருவுக்குச் சமீபத்தில் விமானத்தளங்கள் இருக்க வேண்டும் என்று தேசாதிபதி சென்ற ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்திய றேடியோப் பிரசங்கத்தின்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுவதாவது:-

"நமது நாடு கப்பல்களிலிருந்து வரும் விமானங்களால் விட்டு விட்டு சிறிதுநேரம் பலமாகத் தாக்கக் கூடிய ஆபத்திலிருக்கிறது. அத்தகைய தாக்குதலின்போது ஜனங்கள் அச்சமடைந்து நாட்டுப் புறங்களுக்குச் செல்வதற்கு வீதிகளில் திரண்டால் அதனால் மூன்று விதமான தீமைகள் விளையும். அவையாவன:-

1. ஏராளமான ஜனங்கள் அநாவசியமாகக் கொல்லப்படுவர் அல்லது காயமடைவர்.
2. ஏராளமான மக்கள் தமது வேலைகளை அநாவசியமாக விட்டுவிடுவர். அதனால், அவர்கள் தமது கூலிகளை இழந்தவர்களாவர்.
3. பிரதானமான சேவைகளும் யுத்த வேலையும் அநாவசியமாகத் தடைப்படும்.

இம்மூன்றும் பினங்கிலும் சிங்கப்பூரிலும் றங்கூனிலும் சம்பவித்தன என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

தேசாதிபதி தமது சொற்பொழிவின் "ஆரம்பத்தில் துரதிர்ஷ்டவசமாகச் சிங்களம் மிகக் குறைவாகக் கற்றிருப்பதாலும் தமிழை மிக அதிகமாக மறந்து விட்டதாலும் அவ்விரு பாஷைகளில் ஏதேனும் ஒன்றிற் பேசமுடியா திருப்பதாகக் குறிப்பிட்டார்.

தலைமையும் முன்மாதிரியும்

அவர் மேலும் கூறியதாவது:-

ஆங்கிலம் பேசுபவர்களுக்குநான் சொந்த முறையிற் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். உங்கள் பெற்றோர்களும் இலங்கையிலுள்ள வரிசெலுத்துவோரும் உங்கள் கல்விக்காக அதிகப் பணஞ் செலவிட்டமையாலேயே நீங்கள் ஆங்கிலம் பேசுகின்றீர்கள். ஆதலால், இன்று இலங்கை உங்களைப் போன்ற கல்வி கற்ற அனைவரது தலைமையையும் முன் மாதிரியையும் எதிர் பார்க்கிறது.

தலைமை ஸ்தானத்தின் கடமை அடிக்கடி மறக்கப்பட்டு விடுகிறது. கதாமஞ்சரி என்னுந் தமிழ்ச் சிறு கதைத் தொகுதியிலுள்ள சோம்பேறித் தந்தையின் கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும். உமதுபுதல்வர்களில் யார் சிறந்தவனாக வருகிறான் என்று ஒருவர் கேட்கும் பொழுது உங்களுக்குப் பின்னால் கூரைக்கு நெருப்பு வைக்கிறனே அவன்தான் என்று அத்தந்தை பதிலளித்தார். இன்று இலங்கை மாதாவின் புதல்வர்கள் சிலர் அன்னையின் கூரைக்கு நெருப்பு வைக்கின்றனர்.

இப்போதைய யுத்த நிலைமை

சேமிப்பு வங்கியிலிருந்து தமது பணங்களை எடுத்துக் கொண்டவர்களையும் நாணயங்களைத் திரட்டி வைப்பவர்களையும் மேற்படி இனத்திற் சேர்த்துக் கொள்ளலாம். ஜப்பான் யுத்தத்தில் இறங்கியிருப்பினும் சென்ற இரண்டேகால் வருடத்திலிருந்ததைக் காட்டிலும் இப்போதைய யுத்தநிலைமை எமக்கு நிச்சயமாக வெற்றி கிடைக்குமென்பதைக் குறிக்கிறது. அப்படியான சமயத்தில் ஜனங்கள் இவ்விதம் நடந்துகொள்கின்றனர். பாடு பட்டுத் தேடிச் சம்பாதித்த பணத்தைப் பாதுகாப்பான இடத்திலிருந்து எடுத்துத் திருடர்களாலும் நெருப்பு, ஜலம் ஆகியவற்றாலும் அழிந்து போகத் தக்க இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது.

"ஒருவரோ டொருவர் நேரிற் பழக வேண்டும்"

உங்களில் எத்தனைபேர் உங்கள் வீட்டிலுள்ளவர்களை அல்லது காரியாலயச் சிப்பந்திகளை அல்லது தொழிற்சாலையில் வேலைபார்ப்பவர்களை அல்லது தோட்டத் தொழிலாளிகளை ஒன்று சேர்த்து அவர்களோடு சம்பாஷித்து அவர்களுக்குப் புத்திசாலிகளாகவிருக்கின்றீர்கள்; இத்தகைய நேரத்தில் ஒருவரோடொருவர் நேரிற் பழகிப் பரஸ்பரம் அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

வதந்திகளைத் தடுப்பதற்கும் அச்சத்தை ஒழிப்பதற்கும் இதுவே சிறந்த மார்க்கமாகும். இதில் நீங்களாக ஆரம்ப முயற்சி எடுத்துக் கொள்ளாவிட்டால் ஒன்றும் நடைபெறமாட்டாது. உங்கள் சிப்பந்திகள் இது விஷயத்தில் முதலிற் றலையிடுவர்களென்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது.

விமான எதிர்ப்புப் பாதுகாப்புத் திட்டம்

ஸ்தல விமான எதிர்ப்புப் பாதுகாப்புத் திட்டங்கள் பற்றிப் பிரஸ்தாபிக்கும்போது கூறுகிறதாவது:- ஏராளமான வேலை நடைபெற்றிருக்கிறது. இன்னும் அதிகம் நடைபெற வேண்டியிருக்கிறது. நீங்கள் உதவி செய்யாவிட்டால் அதிகமான வேலை பயனற்றதாகி விடும். பினங்கு, சிங்கப்பூர், றங்கூன் ஆகிய இடங்களிற் சம்பவித்தது போல நெருக்கடி நேரத்திற் சனங்கள் அச்சமடைந்து ஒன்று திரண்டு குழப்பஞ் செய்வது எந்த நாட்டிலும் நடக்கக் கூடியதாகும். லண்டனிற் கூட ஆரம்ப நாட்களில் இவ்விதம் நிகழ்ந்தது. என்ன செய்வது எங்கு செல்வது என்று தெரியாத சனங்களிடையே அச்சத்தினாற் குழப்பம் ஏற்படுவது சகசமே.

நெருக்கடிச் சமயத்திற் சனங்கள் அச்சமடைந்து வீடுகளில் திரண்டு குழப்பம் உண்டுபண்ணாமல் இருப்பதற்கு வீடுகளிலுங் காரியாலயங்களிலும் தொழிற்சாலைகளிலும் உள்ளவர்களுக்குத் தலைவராயுள்ளவர்கள் முன் கூட்டியே பயிற்சி யளிக்க வேண்டும் என்றும் தேசாதிபதி குறிப்பிட்டார்.

கொழும்பில் தியணைக்குஞ் சேவை

தியணைக்குஞ் சேவைகளுக்குத் தொண்டர்கள் தேவையென்று சமீபத்தில் வேண்டுகோள்கள் விடுவிக்கப்பட்டதை யொட்டிக் கொழும்பு தியணைக்கும் உதவிப் படையின் பலத்தைத் தாமதமின்றி அதிகரிப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

மேற்படி படையில் இப்பொழுது 48 தியணைக்கும் வீரர்களும் கப்டன் உட்பட ஐந்து அதிகாரிகளும் இருக்கின்றனர்.

இப்படையை 32 அதிகாரிகளும் 286 வீரர்களும் அடங்கியதாக வளர்க்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பிற் பன்னிரண்டு தியணைக்கும் நிலையங்கள் இருக்கும். அதிகாரிகள் தமது கடமைகளைப் பிரதியுபகாரம் கருதாமற் செய்ய வேண்டும். பிரயாணப்படி மட்டுமே கொடுக்கப்படும். தியணைக்கும் வீரர்கள் பயிற்சி முடிந்து படையிற் சேர்த்துக் கொள்ளப் பட்ட பின்னர், அவர்களுக்குச் சொற்ப சம்பளம் கொடுக்கப்படும்.

கண்ணியமும் காரணமும் நிறைந்தது

காந்திஜி நிலைமைபற்றி அமெரிக்க பத்திரிகையின் கருத்து

நியூயோர்க், ஜன, 5—

"காந்திஜி விலகுகிறார்" என்ற தலைப்பின்கீழ் 'ஹெரால்டு டிரிபியூன்' பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தில் இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி பிரிட்டன் யுத்த முயற்சியில் ஒத்துழைக்கும் கொள்கையை நெருங்கிக்கொண்டிருப்பதாக இந்தியாவின் நண்பர்கள் ஆறுதலடைவார்களென்று கூறுகிறது.

அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:—

இவ்வாறு காங்கிரஸ் இப்போதைய நிலைமைக் கேற்றபடி நடந்து கொண்டதால் இந்த யுத்தத்தில் ஆக்கிரமிப்புக்காரர்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட பிறகு இந்தியாவுக்கு நல்லகாலம் பிறக்க வழியேற்பட்டிருக்கிறது.

விட்டுப்பணி கற்பிக்கவேண்டியதன் அவசியம்

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

யிருக்கும். ஒருவீட்டிலே தினசரி காலையிலும், மாலையிலும் செய்யப்படவேண்டிய சிரமமான முயற்சிகளை மாணவரறிந்து கடினமான பாரமுள்ள வேலைகளைக் காலையிலும் இலகுவானவற்றைப் பின்னேரத்திலுஞ் செய்ய வேண்டுமென்பதைத் தெளிந்து கொள்வர்.

விட்டுப்பணிக் கல்வி பாடசாலையில் எங்கே கற்பிக்கப்படலாமென ஒரு வினாவெழுகின்றது. பாடசாலையின் ஒரு பகுதியில் இதற்கான இடவசதிகள் இருக்க வேண்டும். இங்கே பெறும் பயிற்சி மாணவரிடத்து வீடுபோன்ற உணர்ச்சியை உண்டாக்கக்கூடிய பொருள்களை யுபயோகித்துச் செய்யப்பட்டதாகவிருக்க வேண்டும். விட்டுப்பணி கற்பதிற் குறிப்பெழுதுவதும் அவசியமாகின்றது. இக்குறிப்பை மாணவர் தாமாகவே முறைப்படுத்தியெழுதுதல் அவசியம். குறிப்பெழுதும் முறையிலிருந்து அவர்களது விவேகத்தையும் விஷயத்திலே கவனஞ் செலுத்தியிருக்குமளவையும் பரீட்சிக்கக் கூடியதாகவிருக்கும். குறிப்பிலே அடங்கவேண்டிய விஷயங்கள், பாவித்த உபகரணங்களின் விபரம், வேலை செய்வதில் அநுசரிக்கப்பட்ட ஒழுங்கு, அவதானித்த குறிப்புகள், இறுதியிலெய்திய முடிபுகள் முதலியனவாகும். இவற்றுடன் ஆசிரியர் கூறும் மதிப்புரைக் குறிப்புகளும் சேர்க்கப்படலாம். விட்டுப்பணிக் கல்வியிற் கவர்ச்சியேற்பட்டால் அது சீவியம் முழுவதிலும் வளர்ச்சியடையும். கவர்ச்சியை நிலைக்கச் செய்தற்குதவியாக இக்கல்வியை விருத்தி செய்யக்கூடிய புத்தகங்கள், வெளியீடுகள், விலைப்பட்டிகள், படங்கள், அட்டவணைகள் முதலியன உள்ள வாசிகசாலை யொன்றிருத்தல் வேண்டும். சில வெளியீடுகளிலே தனங்களுக்கு விரிக்கக்கூடியபாய்வகைகள், அளவுகள் விலை முதலியனவிருக்கும். வீடுகளை அலங்கரிக்கக்கூடிய முறைகள் தளபாடங்களின் வகைகள் முதலியன படங்களுடன் குறிக்கப் பெற்றிருக்கும். இவை மாணவருக்குத் தங்கள் வேலையிற் கவர்ச்சியையும் ஊக்கத்தையும் பிறப்பிக்கும்.

விட்டுப்பணிப் பாடங்கள் எம்முறைப்படி கற்பிக்கப்படல்வேண்டுமென்று அநேகரிய விரும்புகின்றனர். பழைய முறைப்படி, ஆசிரியர் குறித்த ஒரு செயலைத் தாம் செய்துகாட்டி அதே வேலையை மாணவரையுஞ் செய்யும்படி ஏவுவர். தற்காலமுறை மாணவரைப் படிக்கச் செய்யத் தூண்டுதலென்பதை அடிப்படையாகக் கொண்டுளது. ஆரம்பத்திலே செய்து காட்டல் இன்றியமையாததெனினும் கட்டளைகளைத் திணியாகக் கொண்டு தாமே கருமங்களைச் செய்வதே சிறப்பான பயிற்சியைக்கொடுக்கும். நன்கு வேலை செய்யக்கூடிய மாணவருக்கு ஏனையோரிலும் பார்க்க அதிகமாக வேலை விதித்தல் வேண்டும். இப்பயிற்சியிலே பெற வேண்டிய சிறப்பான விஷயங்கள் சிக்கனம், திறமை, வேலைச் சுருக்கம் ஆகியவற்றுடன் வீடுகளைச் சிறப்பாகவும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்க அறிதல்.

ஒரு வீட்டிலே காத்திரப் பிரகாரம் உண்டாகும் விபத்துகளுக்கான சிகிச்சை செய்தற்குரிய பொருள்களாகிய மூக்கோண பந்தனம், சுருள் பந்தனங்கள், பஞ்சு, கத்தரிக்கோல், கத்தி முதலியனவும் பிரதானமாக உபயோகிக்கப் படும் மருந்து வகைகளும் ஒரு அலுமாரியி லிருக்க வேண்டும். வீட்டிலுள்ளவர்கள் சுத்தமான உடை அணிய வேண்டுமாகையாற் சலவை செய்தலுக்கு அவசியமானபொருள்களுமிருக்க வேண்டும். சமையலுக்கான பாத்திரங்கள் பெரும்பாலும் மாணவர் தங்கள் வீடுகளிற் பாவிக்கின்ற பாத்திரங்கள் போன்றவையாயிருத்தல் நன்று.

—வரும்.

—வித்திய சமாசாரப் பத்திரிகை மார்கழிமாச வெளியீடு.

நூற்குறிப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

ன்ற டிசெம்பர் மாதத்தில் வெளிவந்த மலர்-௧, இதழ்-௧ ஆகிய முதல் வெளியீடாகும். இதன்கணுள்ள சிறந்த வியாசங்களு ளொன்றாகிய "சைவத்தின் இருகண்கள்" என்பதை இந்துசாதனத்தில் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் அநுவதித்து வெளியிட்டுள்ளோம். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் ஆண்டுக்குரிய கையொப்பப்பணம் ரூபா 1 அணா 8 (1-50சதம்) ஆகும். பெற விரும்புவோர், செயலாளர், "ஞானசம்பந்தம்" காரியாலயம், தருமபுரம், மாயவரம் என்ற விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

எமது பார்வைக்கு உதவப்பெற்ற வெளியீடுகள் பத்திரிகை வென்னுமிவற்றின் பொருட்டு அவற்றை அனுப்பிவைத்த அதிபர்க்கு மனப்பூர்வமான நன்றி கூறுகின்றோம்.

திருவாசகத்துள் மிளிரும் அம்மையப்பர் தொன்மைக்கோலம்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

தப் பால்போன்ற வெண்ணீறு அலங்குகின்றது; மற்றப் பாகத்துப் பசுஞ்சாந்து கவின் செய்கின்றது; வலத்திருக்காதிலே குழை ஒளி விடுகின்றது; அம்மைக்குரிய இடப்பாகத்திலே, வளையல் மிகுதியாக அணியப்பெற்றுள்ள திருக்கரத்திலே பச்சைக்கிளி யமர்ந்திருக்கின்றது. என்றும் இவைபோலிகளைக் கொண்ட மாதொருபாகனுர்தம் பழமைக்கோலத்தையே நோக்கி எனதி சிங்காரம் செய்துய்யும்படி தும்பியை விளித்து அறிவுறுத் தருளுகின்றார் மணிவாசகனுர்.

எனவே, சிவபிரானது வலப்பாகத்திலே இறைவனுக்குரிய புலித்தோலும், குழையும், திருவெண்ணீறும் சூலமும் இலங்கும் எனவும், இடப்பாகத்திலே அம்மைக்குரிய துகிலும், தோடும், சாந்தும் கிளியும் விளங்கும் எனவும் உணர்கின்றோம். இக்கோலமே சிவபிரானது இருபத்தைந்து மூர்த்தங்களுள் ஒன்றாகிய அர்த்த நாரீச்சுர வடிவம். ஆகவே, இத்தொன்மைத் திருக்கோலத்தைக் கொண்ட அம்மையப்பரை மாறாது வழிபட்டுய்வோமாக!

இனைய திருவுருச் சிறப்புக்களைப் பற்றி விரிப்பின் ஈண்டு மிகப்பெருகும். ஆங்காங்கு திருவருளுதவியால் வெளிவர அன்னவன் சேவடி இறைஞ்சுவாம்.

வாழ்க சிவ நெறி!

ஆறுமுகநாவலர் பதிப்புப் புத்தகங்கள்

ஆறுமுகநாவலரவர்கள் பதிப்பு நூல்களை இலங்கையில் விற்பனை செய்வதற்கு வே. கந்தசாமி என்பவரைச் "சோல் ஏஜன்ற்" ஆக நியமித்திருக்கிறோம். மேற்குறித்த வியாபார ஸ்தலம் இந்துசாதன ஆபீசிற்கு முன்னுள்ளது. இன்று தொடக்கி நாவலரவர்கள் பதிப்பு நூல்களுக்குரிய ஓடர்களை இந்தியாவுக்கனுப்பாது மேற்காணும் விலாசமுள்ள புத்தகசாலைக்கே அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

விலாசம்:-

V. Kandasamy
Jaffna Tamil Book Depot
VANNARPONNAI.

Q 134 17. 11 .41 16. 2. 42

விசேஷ விளம்பரம்

இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மெனி, பிரான்சு, முதலிய, தேசங்களின் பிரதான ரேகைசாஸ்திர நூல்களின் பிரமாணங்களைக் கொண்டு உங்கள் கைரேகையிலிருந்து எல்லா விதமான பலன்களையும் சொல்லக் கூடும்.

ஸ்புடம் தசவர்க்கம் முதலிய கணித வகைகளும் மகாதெசை புத்தி பலனும் அடங்கிய ஜாதகம் ரூபா 5 ஷெ விஷயங்களுடன் கோசரபலன் காலசக்கரபலன், பாவபலன், முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

பேராக்கத்தை, நா. சின்னத்துரை கைதடி வடக்கு, கைதடி.

Y 67 20-7-41—19-7-42

வாதம், சலரோகம், குன்மம், முதலிய எந்த வியாதியானலும் உத்திரவாதத்துடன் குணப்படுத்தப்படும்

சுகாதார மாஜி மந்திரி கனம் Dr. T. S. S. ராஜன் ஸ்ரீ. S. சத்தியமூர்த்தி M. L. A. Dr. C.சபாபதி, M. B. C. M. M. R. C. S. L. R. C. P. முதலிய பலரால் புகழ்ந்து நற்சாட்சிப்பத்திரம் அளிக்கப்பட்டன. நேரில் அல்லது தபால்மூலமாய்ச் சிகிச்சை பெறவும்.

Dr. K. S. Paripurnananda
Regd. MEDICAL Practitioner
R. K. S. Vaidyasala
Palaly Rd. Kandarmadam
JAFFNA

Q 129 6-11-41—5-2-42

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(396 மீ)
(1 இசைத்தட்டு)

வெள்ளி ஜனவரி 9

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 எஸ். ராமஸ்வாமி ஐயர் பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 காலை இன்னிசை † 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 டாக்கிமெட்டுகள் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 35 எஸ். ராமஸ்வாமிஐயர் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 ஸ்ரீமதி பானுமதி ஸ்ரீமதி கலோசனு பாட்டு 5-40 தாான்-ஜெரீப் 5-50 கவ்வாலிகள் † 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமநிகழ்ச்சிகள் 6-30 ஸ்ரீமதி பானுமதி பாட்டு 7-00 இலக்கியவாசகம் 7-15 வைடி-ஷரீப்† 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 தியாகராஜ உத்ஸவ கச்சேரி 9-00 உலக விவகாரங்கள் † † 920 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை † 9-55 யுத்த விமரிசனம் 10-00 ஒலிபரப்பு முடிவு.

சனி ஜனவரி 10

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 எஸ். வைதண்டம் ஐயர் வயலின் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 படப்பாட்டுகள் † 9-00ஒலிபரப்பு முடிவு.

1-00 பொழுதுபோக்கு மணிகள் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எஸ். வைதண்டம் ஐயர் வயலின் 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஸ்ரீமதி கமலாம்பாள் பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 கமலாம்பாள் பாட்டு 5-40 திருமொழி விளக்கம் 5-50 பஜனை 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராம நிகழ்ச்சிகள் 6-30 எச். எம். வி. சென்னை ஸ்டுடியோ கோஷ்டியார் 7-00 புத்தக விமர்சனம் பேச்சு 7-15 நாளவாத்தியக்கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8 00 மஹாபுரம் விசுவநாதஐயர் பாட்டு 9.15 நாராயண ஐயங்கார் கோட்டுவாத்தியம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 இடைவேளை † 9-55 யுத்த விமரிசனம் 10-00 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு ஜனவரி 11

காலை 7-30 கீதாரம்பம் † † 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி சாரதா அனந்தராமன் பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 சுசரதேவபாணி † 9-00 ஒலிபரப்பு முடிவு.

12-00 சினிமா உலகம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி சாரதா அனந்தராமன்பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 நூல் வகை † 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 மாயவரம் கே. சபேசன் வீணை 5-40 தேவாரதவை 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராம நிகழ்ச்சிகள் 6-30 மாயவரம் சபேசன் வீணை 7-15 தென்னிந்திய கிராமம் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடல் 9-05 அமெரிக்க அபிப்பிராயம்9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை † 9-45 யுத்தவிமரிசனம் 10-00 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் ஜனவரி 12

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 சமயபுரம் சுந்தரேசபிள்ளை நாகஸ்வரம் 8-15 ஆங்கிலத்தில் 8-25 படப்பாட்டுகள் † 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 மாதர்மட்டும் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 வி. பி. லக்ஷ்மி நாராயண மேனன் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 சமயபுரம் சுந்தரேச பிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமநிகழ்ச்சிகள் 6-30 வி. பி. லக்ஷ்மி நாராயணமேனன் பாட்டு 7-10 நடைமுதல் பேச்சு 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 திருப்பாம்பரம் என். ஸ்வாமிப்பிள்ளை புல்லாங்குழல்9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை † 9-55 யுத்த விமரிசனம் 10-00 ஒலிபரப்பு முடிவு.

மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரம்

புதுடெல்லி, ஜன 2—

பரபரப்பையும் அச்சத்தையும் கொடுக்கக்கூடிய செய்திகளை நிறுத்துவதற்குத் தணிக்கை அதிகாரிகளை நியமனஞ் செய்வும் தணிக்கை சம்பந்தமான ஏனைய அதிகாரங்களைப் பிரயோகிக்கவும் மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக இந்திய அரசாங்கத்தின் விசேஷ காஸெற்றில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

புதிய வெளியீடுகள்

சிவிக்ஸ் (Civics) எனப்படும்

குடி இயல் நூல்

இலங்கை வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.

(அங்கீகார இலக்கம், 21 A & B / 41 திகதி 3-7-41)

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50

7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.

மானேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம். உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிரந்தமாயும், சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம், காரியதரிசி.

(வி) (Y. 22. 1-11-40 to 31-10-41)

குயின்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த ஊருத, நல்ல சத்தமுள்ள யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.

(Y. 21. 11-8-40—10-8-41.) வி

புதிய [1942] பாடத்திட்டத்திற்கு இயைந்த தமிழ் இலக்கிய வாசகங்கள்

5-ம் 6-ம் 7-ம் வகுப்புகட்குரியவை

1	இலக்கியவாசகம் முதற்பாகம்	சதம்	15
2	,, இரண்டாம்பாகம்	சதம்	20
3	,, மூன்றும் பாகம்	சதம்	25

செந்தமிழ்க் கருவூலம்

திரு. வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட உரையுடன் கூடியது. J. S. C. பரீட்சைக்கு ஆதாரமாக ஆறும் ஏழாம் தரங்களில் மாணவர்க்குச் செய்யுளிலக்கிய அறிவை வளர்த்தற்கேற்ற பாடபுத்தமாகக் கொள்ளத்தக்கது.

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை.

600 வருஷப் பழமை வாய்ந்தது

பெரிய வைத்தியர் ஒருவரின் ஏட்டிலிருந்து காணப்பட்ட பழைய வைத்திய முறையின்படி புத்தகுரு ஒருவரால் ஒரு மலைக்கோவிலில் இப்போது தயாரிக்கப்படும் 'நேத்திர ரத்தின தைலம்' முறை 600 வருஷப் பழமை வாய்ந்தது.

"நேத்திர ரத்தின தைலம்" பலநோய்களை மாற்றவல்ல புகழ்பெற்ற எண்ணெயாகும்.

நேத்திர ரத்தின தைலம் நோய்களை மாற்றப் பெயர் பெற்ற மருந்தெண்ணெய்.

இத்தத் தைலத்தை ஒழுங்காகப் பாவித்து வந்தால் கண்குத்து, நீர்வடிதல் கண்சிவப்பு, கண்வலி, ஜலதோஷம் நரம்புவலி, தலைவலி முதலிய நேத்திரத்துக்கும் தலைக்கும் சம்பந்தமான எல்லா வியாதிகளும் சொஸ்தமாகும், கண்பார்வை குன்றியவர்களுக்கும் சமீபபார்வை, தூரப்பார்வை யற்றவர்களுக்கும் இத்தைலம் ஓர் அருஞ் சஞ்சீவியாகும், இது மூளைக்குக் குளிர்ச்சி யளித்துக் கண்நோய்கள் உண்டாகா வண்ணம் தடுக்கும்.

குறிப்பு: இந்த எண்ணெய் மயிர் வளருகிறதற்கு உத்தரவாதமுடையது.

விலை ரூபா. 2/50

ஏஜெண்டுகள்:- எஸ் மால்ஜீ அமிஜீ பெரியகடை, யாழ்ப்பாணம்.

Q 115 23.10.41-22-1-42

சி. எம். சாமி மன்மதக் குளிகை

மிகுந்த பலத்தையும் ரத்த விருத்தியையும் உண்டாக்கும்

அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழ்பெற்றது; இதற்கு நிகரான ஔடதம் வேறில்லை ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம்.

இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும், நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது, எவ்வித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.

அச்சியசாட்டார் முன்பண மனுப்ப வேண்டும்

60 குளிகை ரூபா 5 — 20 குளிகை ரூபா 2

தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி 8

கிளை ஆபீஸ்:-

1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y 221 31-3-4 30-3-41

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1942) பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்

மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதியொன்றன் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம் 20.8-40 — மனேஜர்.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு: பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.

"புரொப்ரைட்டர்" K. A. இரத்தினசிங்கம்

Y 19. 4-3-41—3-3-42

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10-00 அரைகலம் ரூபா 5-50
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

தொடர்ந்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜருடன் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாவேனும் ஒழுங்கு செய்யலாம். உடன்படிக்கை அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசபை எல்லைக்குள் தபால் ரூபா 5-00 இங்கிலீஷ் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீஷ் தமிழும் 12-00
தொலைநாட்டு பகுதி 9.00 இங்கிலீஷ் தமிழும் 18.00

தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

1933-ம் ஆண்டு தொடக்கப் பெற்றது

அரசினரால் பதிவு செய்யப்பட்டது

அங்கத்தவர்கட்டணப்பணம் மாத்திரம் 45000 ரூபாவிற்குமேலிருக்கிறது

30 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு ஆசிரியரும் அங்கத்தினராகச் சேரலாம். மாதக்கட்டண விகிதம்:-

1-ம் வகுப்பு ரூ. 4-00 2-ம் வகுப்பு ரூ. 2-00
3-ம் வகுப்பு ரூ. 1-00

தேவையான விபரம் என்னிடம் அறிந்து கொள்ளலாம்

ச. பொ. இராசையா
காரியதரிசி,
வடமாகாண ஆசிரியர்சகாயநிதிச்சங்கம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வண்ணார்பண்ணை

H 145 1-12-41—31-5-42

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva PrakasaPress Vannarponnai, Jaffna, on Thursday January 8th 1942.